உ

ஓம் ஸ்ரீரமண சத்குரு பரமாத்மனே நம:

# மரணத்தின் இரகசியம்.

T. 6782.

இஃது

திருவண்ணமலை ஸ்ரீரமண பக்தர்களிலொருவரான

**S. நாராயண ரெட்டியாரால்**

எழுதப்பட்டது.

நசிகேதுக்கும் எமதருமருஜனுக்கும், யாஞ்ஞவல்கி
யருக்கும் ஜனகருக்கும், யாஞ்ஞவல்கியருக்கும்
மைத்திரேயிக்கும் நடந்த சம்பாஷணைகளும்
இத்துடன் சேர்க்கப்பட்டுள்ளன.

முதற்பதிப்பு

**1931**

காபிரைட்] [ரிஜிஸ்டர்ட்

விலை அணு 4.

I
129

ஓம் ஸ்ரீ ரமண சத்குரு பரமாத்மனே நம...

# முகவுரை

இப்புத்தகத்தி லிருக்கப்பட்ட விஷயங்க ளனைத்தும் எனது யுக்திக்கும், நான் படித்த ஞான நூல்களுக்கும் சம்மதமாயிருக்கிறபடியால் இதை வாசிக்கிறவர்களுடைய யுக்திக்கும் சம்மதமா யிருக்குமென்று நினைக்கிறேன். படிக்கிறவர்களுடைய யுக்திக்கும் சாஸ்திரங்களுக்கும் சம்மதமானவைகள் அனுபவச்சம்மதமானவை என்பதில் சந்தேகமில்லை.

மரணத்தின் இரகசியத்தை உள்ளபடி அறிகிறவர்கள் மோக்ஷாதிகாரிகளாவர். மோக்ஷம்=விடுதலை. எதில் நின்று விடுதலை? மரணத்தினின்று. யாருக்கு விடுதலை? மனிதனுக்கு. மனிதன் சுவபாவத்தில் சாவில்லாதவனு யிருக்கிறபடியால் சாவுக்குரிய அம்சங்களிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் முறைகளைத் தேடுகிறுன்.

இவ்வுலகத்தில் கோவில்களும், கடவுள் பூசைகளும் மடங்களும், ஆத்ம அனுத்ம விசாரணைகளும், மதங்களும், மதக்கொள்கைகளும், மதப்பிரசாரங்களும், வேதங்களும், தர்க்க சாஸ்திரங்களும், ஆகமங்களும், புராணங்களும், இதிகாசங்களும், நீதி நூல்களும், தவசும், விரதங்களும், ஏற்பட்டிருப்பானேன்? இவையாவும் மோக்ஷம் என்கிற தொன்றை முன்னிட்டேயாகும்.

நம் நாளில் சாவுக்குத் தப்பிப் பிழைத்துள்ளவர்களை நாம் பாராத காரணத்தால் மோக்ஷத்தை முன்னிட்டு ஏற்படுத்தப்பட்டுள்ள மேற் சொன்னவை அனைத்தும் வீண் வியவகாரங்களா? அப்படி ஒருபோதும் இருக்கமாட்டா.

சாஸ்திர ஆராய்ச்சியாலும், தத்துவ விசாரத்தாலும் தான் சாகாதவனென தெரிந்து கொண்டு இவ்வறிவில் திடச்

சித்தனுயிருப்பது ஒன்று. மோக்ஷ சாதனங்களான யோகப் பயிற்சிகளை அனுஷ்டித்துத் தன்னில் சாவுக்குரிய அம்சங்களைப் பிரித்துத்தள்ளி சாவில்லாததைப் பிரத்தியக்ஷமாகப் பார்ப்பது மற்றொன்று. முந்தியதைக் காட்டிலும் பிந்தியது சிரேஷ்டமானது.

முந்திய ஞானியின் பிராணவாயுக்கள் அதனதன் இஷ்டப்படி நடமாட்ட முடையவைகளா யிருக்கிறபடியால் மரண காலத்தில் அவன் ஏமாற்றப்பட்டு அவைகள் இவனைக் கர்ப்பப் பிரவேசம் செய்விக்கின்றன. கர்ப்ப வாசத்தால் தன் பூர்வ ஞானத்தை அவன் மறக்கிறான். எவ்வித சங்கத்தில் அவன் வளருகிறானோ அவ்வுறவின் முறையார்களுடைய குண நடத்தைகளைத் தனதாக்கிக்கொள்கின்றான். மேற் சொல்லப்பட்ட கோவில்களும், மதப்பிரசங்கங்களும் அவனுடைய பூர்வ ஞானத்தை நினைப்பூட்ட அவன் விழித்துக்கொண்டு ஆத்மாபி விருத்திக்குரிய சாதனங்களை கைகொண்டாலும் கொள்வன் அல்லது தனக்கு வாய்த்துள்ள நிலையில் திருப்தனாக இருந்தாலும் இருந்துவிடுவன்.

தன் ஆத்மாவை தரிசித்து ஆத்மாவிற்கும் பரமாத்மாவிற்குமுள்ள ஐக்கிய நிலையைக் கண்டுகொண்டவருடைய பிராணவாயுக்கள் கும்பகத்தால் ஆத்மாவில் அடங்கவும், அவரிஷ்டம் போல அவைகள் சஞ்சரிக்கவும் அவைகளைப் பழக்கி விட்டவராகையால் மரணகாலத்தில் அவைகள் அவரதாத்மாவில் அடங்கிவிடுகின்றன. ஒரு சமயம் அவருக்கிஷ்டமிருந்து மறுபிறவி எடுக்க அவர் கர்ப்பப்பிரவேசம் செய்தாலும் அவருடைய மனதும், பிராணவாயுக்களும் அவர்பிறகே செல்கின்றன. கர்ப்பவாச காலங்களில் அவருக்கு பூர்வ ஞானம் மறவாது. பிறந்து வளருங் காலங்களிலும் அவருக்கு அவருடைய ஆத்ம அறிவு கூடவே வயதிற்கேற்றவாறு பிரகாசிக்

கும். தன் தேகாந்தகாலம் வரையில் அவருடைய உதவியை விரும்புகிறவர்களுக்கு அவர் ஓர் பேருபகாரியாக இருப்பார். இத்தகையாருடைய மரணத்தைப் பற்றி மற்றும் சில விஷயங்களை என்னால் எழுதி அச்சிடப்பட்டுள்ள கடவுளறிவு என்கிற நூலில் படிப்பீர்களாக.

எது எப்படியிருப்பினும், உடல் உயிர் பெற்றுள்ள ஒவ்வோர் ஜீவனும் தன் பிரத்யேக ஜீவத்தன்மையை இழக்காமல் தேக தத்துவத்திலும், மனத் தத்துவத்திலும் பல பிறவிகள் மூலமாக அபிவிருத்தியாகுமானால் மனித ஜன்மத்தில் கடவுளறிவு வளரப் பெற்றுத் தன் பிரத்யேக கண்ட ஜீவாத்ம நிலையைப் பரிபூரண அகண்ட பரமாத்ம நிலைக்குப் பூரணப் படுத்தித் தன் ஆன்மாவிற்கும் பரமாத்மாவிற்குமுள்ள ஒற்றுமையைக் கண்டு ஜனன மரண ரூபமாயுள்ள தன் ஜீவயாத்திரையை முடித்துக்கொள்கின்றன என்பது சத்தியத்தினும் சத்தியமானது.

முன்னம் என்னால் பிரசுரிக்கப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள், திருவண்ணாமலை ஸ்ரீ ரமணமஹர்ஷியவர்களுடைய சரித்திரோபதேச கிரந்தங்களையும், பிந்தி என்னால் வெளியாக்கப்பட்ட ஆன்மதரிசனம் கடவுளறிவு, ஸ்ரீ பகவத்கீதார்த்த பால போதினி என்கிற நூல்களையும் தமிழ் நாட்டன்பர்கள் அன்புடன் பெற்று படித்ததைப்போலவே மரணத்தின் இரகசியம் என்கிற இப்புஸ்தகத்தையும் பிரியமுடன் வாங்கி வாசிப்பார்களென்று நம்புகிறேன்.

ஆன்மா, பரமான்மா, பகவான், ஈசுவரன், பிரம்மம், கடவுள் இவ்வாறும் ஒரு பொருட்சொற்கள்.

திருவண்ணாமலை,
15—11—31.

அடியார்க்கடியேன்,
S. நாராயண ரெட்டி.

ஓம் ஸ்ரீ ரமண சத்குரு பரமாத்மனே நம:

---

## கடவுள் வணக்கம்.

சாதிகுலம்பிறப்பிறப்புப் பந்தமுத்தியருவுருவத்
தன்மைநாம

மேதுமின்றியெப்பொருட்கு மெவ்விடத்தும்பிரிவறநின்
றியக்கஞ்செய்யுஞ்

சோதியைமாத்தூவெளியை மனதவிழநிறைவான
துரியவாழ்வைத்

தீதில்பரமாம்பொருளைத் திருவருளேசினைவாசச்
சிந்தைசெய்வாம்.

---

## குருவணக்கம்.

இந்திரசாலங்கனவு கானலினீரெனவுலக
மெமக்குத்தோன்றச்

சந்ததமுஞ்சிற்பரத்தா லழியாததற்பரத்தைச்
சார்ந்துவாழ்க

புந்திமகிழுறநாளுந் தடையறயானந்தவெள்ளம்
பொலிகவென்றே

வந்தருளுங்குருரமணர் மலர்த்தாளையனுதினமும்
வழுத்தல்செய்வாம்.

---

ஓம் ஸ்ரீ ரமண சத்குரு பரமாத்மனே நம:

# மரணத்தின் இரகசியம்.

இவ்வுலகில் உடல் உயிர் பெற்றுவளரும் எல்லா ஜீவ ஜெந்துக்களுக்கும் மரணபயம் பொதுவாக இருந்து வருகின்றது. மரணமானது மனிதர்களில் உண்டாக்கும் அனர்த்தங்களுக்கோ அளவே கிடையாது. எந்த நேரத்தில் மரணம் வந்து உயிரைக் கொள்ளைகொண்டு உடலை வீழ்த்துகிறதென்று அறிகிறவர்கள் மனிதர்களில் மிகச் சிலரே. மரணத் தொழிலை நடத்தும் இயமன் வரும் நேரத்தை முன்னதாக அறிபவரும் அன்னேரத்தில் சாகச் சித்தனா யிருக்கலாமே ஒழிய சாவுக்குத் தப்ப முடியாது.

மனிதர்களுடைய ஆயுட் பிரமாணம் நூறு வருடங்களென்று தீர்மானம் செய்யப்பட்டுள்ளது. நூறு வருடங்களுக்குமேல் வயதை வளர்க்கும் சாதனங்களைப் பழக்கத்தில் வைத்திருப்போனுயிரையும் சமயம் பார்த்து இயமன் கவர்ந்துகொண்டு போய்விடுகிறான். கற்பின் மகிமையால் கூற்றுவனைக் கண்டு, புத்தி சாதுர்யத்தால் அவனை ஏமாற்றித் தன் கணவனான சத்தியவானை இயமன் கையிலிருந்து சாவித்திரி விடுவித்துக் கொண்டதும், பக்தியின் பெருமையால் இயமனுடைய வரவைப்பார்க்க நேர்ந்த மார்க்கண்டேயன் தான் உபாசித்து வந்த சிவபெருமானருளால் சாகாவரம் பெற்றதும், ஸ்ரீ கிருஷ்ணரைப் போன்ற அவதார புருஷர்களும், மகான்களும் செத்தோரை உயிர்பெற்றெழச் செய்ததும் பொது விதிகளாகா.

மரணமானது மனிதர்களிலும், மற்றெல்லா ஜீவஜெந்துக்களிலும் அளவிட்டுச் சொல்லமுடியாத அனர்த்தங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கையில் கருணாநிதி என்றும், சர்வ வல்லமையுடையவரென்றும் புகழப்படா நிற்கும் கடவுளுடைய ஆளுகையில் இயமன் இத்தொழிலை நடத்துவானேன் என்று சந்தேகித்தவர்களும், சந்தேகிக்கிறவர்களும் பலர். ஆனாலும், இவ்வுலகில் எப்போதுமே இத்தொழில் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்குங்கால் இயமன் கடவுளாணையால்தான் இத்தொழிலை நடத்திக் கொண்டிருக்கின்றான் என்றே நிச்சயிக்க வேண்டியதாயிருக்கிறது.

நான் தாயின் கருப்பையில்தான் உற்பத்தியானவனா? அல்லது அதற்கு முன்னும் இருந்தேனா? செத்தபிறகும் இருப்பேனா? கருப்பாசயத்திற்குள் வருவதற்குமுன் எங்கிருந்தேன்? எப்படி இருந்தேன்? செத்தபிறகு என்னிலைமை எவ்விதமிருக்கும்? எங்கிருப்பேன்? என்கிற கேள்விகள், அறிவில் வளரும் ஒவ்வோர் ஆணின் உள்ளத்திலும், பெண்ணின் மனத்திலும் உதிக்குமல்லது உதிக்காமலிரா. ஒரு ஞானாசிரியரை அடைந்த சீஷன் அவரைக்கேட்டு தெரிந்துகொள்ளும் இரகசியங்களும் இவையே யாகும்.

சாவித்திரிக்கும், மார்க்கண்டேயனுக்கும் இயமனைப் பார்க்கும் சக்தி யிருந்தது. மனிதர்களில் பெரும்பாலோருக்கில்லாத இவ்வித சக்தி இவர்களுக்குண்டா யிருந்தது ஈசுவரானுக்கிரகத்தாலென்றே நாம் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். சாவித்திரி பதிபக்தியாலும், மார்க்கண்டேயர் ஈசுவரோபாசனையாலும் சூக்ஷ்ம உரு உள்ள இயமதருமராஜனைப் பார்க்கவல்ல சூக்ஷ்ம கண்களைப் பெற்றவராயினர்.

நாம் இப்புத்தகத்தில் நசிகேதுவுக்கும் இயமதரும ராஜனுக்கும் நடந்த சம்பாஷணைகளையும் படிக்கப் போகிறோம்.

நசிகேது என்கிற வாலிபன் தன் தவச்சக்தியால் இப்பூலோகத்தில் தன் ஸ்தூல தேகத்தைவிட்டுவைத்துத் தன் சூக்ஷ்ம தேகத்தோடு சூக்ஷ்ம உலகமாகிய இயமலோகத்திற்குச் சென்று, இயமனைக்கண்டு, அவனோடு சம்பாஷித்துத் திரும்பி வந்திருக்கிறான்.

நாம் தூங்கும்போது நித்திராசக்தியானது ஸ்தூலதேகத்திலிருக்கும் நம்மை சூக்ஷ்மதேகத்தோடு பிரித்து, சூக்ஷ்ம சொப்பன உலகத்தில் சஞ்சரிக்கச் செய்து, மறுபடியும் நம்மை ஸ்தூலதேகத்தில் விழித்தெழச் செய்கிறது. சொப்பன காலத்தில் ஸ்தூலதேகத்திற்கும், சூக்ஷ்ம தேகத்திற்குமுள்ள சம்பந்தம் அறுபடுகிறதில்லை. மரணத்தின் போது ஸ்தூல தேகத்திற்கும், சூக்ஷ்ம தேகத்திற்குமுள்ள சம்பந்தம் அறுபட்டுப் போகிறது.

யோகிகள் ஸ்தூல தேகத்திலிருந்து சூக்ஷ்ம தேகத்தைப் பிரிக்கவும், சூக்ஷ்ம தேகத்திலிருந்து காரண தேகத்தைப் பிரிக்கவும், காரண தேகத்தைத் தள்ளித் தனித்திருக்கவும் வல்லவர்.

ஸ்தூல தேகத்திற்குச் சரியான ஸ்தூலப் பிரபஞ்சம் இருக்கிறதுபோலவும், சூக்ஷ்ம தேகத்திற்குச் சரியான சூக்ஷ்ம உலகம் இருக்கிறது போலவும், காரண தேகத்திற்குச் சரியான காரண உலகமும் இருக்கின்றது. ஸ்தூலப் பிரபஞ்சத்தைப் பூலோகமென்றும், சூக்ஷ்ம பிரபஞ்சத்தைப் புவர்லோகமென்றும், காரண பிரபஞ்சத்தைச் சுவர்க்கலோகமென்றும் சொல்வர்.

யோகிகள் தவச்சக்தியால் தாமே சுவர்க்கலோகத்திற்குப் போவதுபோல, மற்றவர்களும் யாகயக்ஞாதி நற்கருமங்களின் பலனாக சுவர்க்கலோகாதிபதியாகிய பிரம்ம தேவனால் அழைத்துக்கொண்டு போகப்படுகிறார்கள்.

தூக்கத்தில் நித்திராசக்தியானது ஸ்தூல தேகங்களிலிருந்து சூக்ஷ்ம தேகங்களைப் பிரிக்கிறது. மரணத்தின் போது இயமன் ஸ்தூல தேகத்திலிருந்து சூக்ஷ்ம தேகத்தைப் பிரிக்கிறான். பிரம்ம தேவன் ஸ்தூல சூக்ஷ்ம தேகங்களைத் தள்ளி காரண தேகத்தோடு சுவர்க்கலோக போகங்களை அனுபவித்தற்குரிய ஜீவர்களைத் தன் உலகமாகிய சுவர்க்கலோகத்திற்கழைத்துக் கொண்டு போகிறான்.

இந்த ஸ்தூல உலகத்தில் ஒவ்வோர் நாளில் எவ்வித விருத்திகள் அதாவது எண்ணங்கள் ஒருவனுடைய மனதில் பிரதானமாகக் குடிகொண்டிருக்குமோ, அவ்வித மனவிருத்திகளுக்கேற்றபடி அவனுடைய சொப்பன உலகக் காக்ஷியும், சொப்பன உலக அனுபவமும் இருப்பதுபோலவே இவ்வுலகத்தில் ஒருவனுடைய ஆயுட்கால முடிவில் அவனுடைய மனதில் எவ்வித விருத்திகள் விசேஷப்பட்டு நிற்குமோ, அவ்வித மன விருத்திகளுக்கேற்ற விதமாகவே அவனுக்கு மரணத்தின்போது இயமலோகக்காட்சியும், அனுபவமும் சுவர்க்கலோகக் காட்சியும், அனுபவமும் இருக்கும்.

பகலில் வேலை செய்வதால் களைத்த தேகமும், இந்திரியங்களும் தூக்கத்தில் இளைப்பாறி புதிய பலம் பெற்று, காலையில் விழித்தெழுந்ததும் பழையபடி உற்சாகத்தோடு வேலை செய்ய உபயோகப்படுகின்றன. மரணகாலத்தில் இச்சா சொரூபமான எண்ணங்களோடு இயமலோகத்திற்கு போகும் ஜீவன் தன் எண்ணங்களை திடப்படுத்திக்கொண்டு, இவ்வெண்ணங்களின்படி தன்னிஷ்டங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கான அனுகூலங்கள் நிறைந்துள்ள குடும்பத்தில் ஸ்திரீ புருஷர்களுடைய சுரோணிதம் சுக்கிலங்களை ஆச்ரயித்து, கருக் குழியில் பிரவேசித்துத் தனக்கிஷ்டமான தோர் தேகத்தைக் கட்டிக்கொண்டு, தாயருந்தத் தானருந்

தித் தன் தேகத்தை வளர்த்திப் பருவ காலத்தில் தாயார் வயிற்றிலிருந்து பூமியில் பிறக்கின்றது. சுவர்க்கலோகத் திற்குப்போன ஜீவர்களும் இவ்வாறே பூலோகத்திற்குத் திருப்பப்படுகிறார்கள்.

தூக்கத்தில் ஸ்தூலதேகத்திற்கும், சூக்ஷ்ம தேகத்திற்கு முள்ள சம்பந்தம் அறுபடாத காரணத்தால் அயர்ந்து தூங் கும் தேகத்தின் கட்டு கலைகிறதில்லை. சூக்ஷ்ம தேகத்தோடு வெளிப்பட்ட ஜீவன் சென்றபடியே திரும்பி, அதே தேகத்தில் நுழைந்து அதை விழித்தெழச் செய்கிறது. மரண காலத்தில் சம்பந்தம் அறுபட்டுப்போகிற காரணத் தால், தேகக்கட்டுகலைந்து அழுக ஆரம்பிக்க, அதைக் கொண்டுபோய் புதைத்தோ, கொளுத்தியோ விடுகிறார்கள். சூக்ஷ்ம தேகத்தோடு வெளிப்படுத்தப்பட்ட இந்த ஜீவன் புதி யதோர் உடலைக் கட்டிக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. மோக்ஷ இச்சையுள்ள யோகிகள் தவ அக்கினியால் பிறவிக் குவித்தான காரண சரீரத்தைக் கொளுத்தி விடுகிறார்களாகை யால், அவர்களிடம் இத்தொழில் நின்றுவிட அவர்கள் ஜீவன்முக்தர்களாக இவ்வுலகில் ஜீவித்திருந்து மரண காலத் தில் விதேக கைவல்லிய பதவியை அடைகிறார்கள்.

அணுவுக்கணுவளவான உடலைத்தரித்த உயிர் முதல் ஜீவன்முக்தன் வரையிலுள்ள அனைத்தான் மாக்களுக்கு வேண்டுவன வெல்லாவற்றையும் கடவுள் இவ்வுலகத்தில் அமைத்துள்ளார். பல்லாயிரம் சக்திகள் குறைவதை ஆங் காங்கு அப்போதைக் கப்போதே நிறப்பிக்கொண்டிருக்கின் றன. ஒருவருக்கொருவர் உபகாரம் செய்துகொள்ளும் குணத்தைக் கடவுளருள் அவரவர்களுடைய உள்ளத்திலிருந் துத் தூண்டிக்கொண்டிருக்கின்றது. நற்குண நற்செயல்க ளுள்ள தரும ஸ்திரீ புருஷர்களை இவ்வுலகம் போற்றுகிறது.

நற்குண நற்செயல்களுள்ள புண்ணிய சாலிகளுடைய பிரதி தின சொப்பனக்காக்ஷிகள் இன்பகரமாகவே இருக்கின்றன. புண்ணிய ஸ்திரீ புருஷர்களுடைய மரணக்காட்சி சீக்கிரமா யிருப்பதோடு இயமலோகம் அல்லது பிதுர்லோகத்து தேவர் களாலும், தேவிமார்களாலும் பிரியமுடன் வரவேற்கப் பெற்று உபசரிக்கப் படுகிறார்கள்.

அனைத்துயிர்களும் அறிவிலும் அன்பிலும் வளர்வதை நாம் பார்க்கிறோம். நாம் பார்க்கிற மனிதர்களில் அறிவி லும், அன்பிலும் அதிகரித்துள்ளவன் ஜீவன்முக்த னென் பதை எவரும் மறுக்கமாட்டார்கள். ஜீவன்முக்தனுடைய அறிவளவு சாதாரண மனிதன் வளர ஓராயிர வருடங்கள் பிடிக்குமாகில் இவன் இவ்வோராயிரமாண்டு காலம் மரணத் திற்குத் தப்பி ஒரே தேகத்தில் இந்திரிய வலிவுடன் மன முயற்சி குறையாமல் எப்படி பிழைத்திருக்க முடியும்? ஜீவன்முக்தன் ஜன்மாந்திரங்கள் வழியாக அறிவிலும், அன் பிலும் அபிவிருத்தியானதுபோல சாமானிய மனிதனும் ஜீவன்முக்தனது அறிவளவு தன்னறிவை வளர்க்க ஓராயிர வருட காலத்தில் பல பிறவிகள் எடுக்கவேண்டி யிருக்கிறான் என்பது சுருதி யுக்தி அனுபவச் சம்மதமாயிருக்கிறது.

அறிந்தோ, அறியாமலோ அல்லது கடவுளருளால் தூண்டப்பட்டோ மோக்ஷ நிலையை நாடி அறிவிலும், அன்பி லும் வளரா நிற்கும் அனைத்தாத்மாக்களுக்கு இவ்வுலக மானது அறிவை வளர்க்கும் வித்தியாசாலையாகவும், அன்பை பெருக்கும் தொழிற்சாலையாகவும் இருந்து வருகிறது.

மரணமானது அறிவிலும் அன்பிலும் வளரும் ஜீவான் மாக்களுக்கு அறிவையும், அன்பையும் வளர்ப்பதற்கான சௌகரியங்களை அமைத்துக் கொடுக்கவல்ல பேருபகாரியா யிருக்கின்றது. முதல் வகுப்பில் வாசிக்கும் பிள்ளைகள்

வருட முடிவில் பரிக்ஷிக்கப்பட்டு சிலர் இரண்டாம் வகுப்பிற்கும், சிலர் மூன்றும் வகுப்பிற்கும் மாற்றப் படுகிறார்கள். சிலர் முதல் வகுப்பிலேயே நிறுத்தப்படுகிறார்கள். முதல் வகுப்புச் சிறுவர்கள் தம் சகபாடிகள் தம்மை விட்டுப் போனதற்காக வருந்தலாமே ஒழிய இவர்கள் அவர்களை இழுத்துவைக்க முடியாது. அவர்களும் இவர்களோடு நின்றுவிட சம்மதப்படார். அதிகாரிகளும் ஒப்பமாட்டார்கள்.

தூங்கும்போது நித்திரா சக்தியானது சுலபமாகவும், அனுயாசமாகவும் ஜீவான்மாக்களைத் தூல தேகங்களிலிருந்து பிரித்துச் சுலபமாகவும், அனுயாசமாகவும் ஸ்தூல தேகத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பது போல, மரணமானது ஜீவான்மாக்களைச் சுலபமாகவும் அனுயாசமாகவும் தூல தேகங்களிலிருந்து விடுவித்துக்கொண்டுபோய் உலகவாழ்வில் தன் தன் உள்ளத்தில் சேர்த்துவைத்துள்ள வாசனைகளுக்கேற்ற அனுபவங்களை அனுபவிக்கச்செய்து மறுபிறவியில் தன் தன் பிரதானமான இச்சைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்கனுகூலமான இடத்தில் பெண்களின் கர்ப்பாசயங்களில் செலுத்திவிடுமென்று நிச்சயிக்கலாம். இச்சையின் வசப்பட்டு பூலோகக்கவர்ச்சியால் இழுக்கப்படும் இஜ்ஜீவர்கள் கர்ப்பப் பிரவேசம் செய்யும் செயல் சுலபமானதாகவும், சுககரமானதாகவும் இருக்கலாம்.

அகால மரணமும், துர்மரணமும் ஜீவான்மாக்களுக்குத் துன்பகரமாயிருக்குமன்றிச் சுபாவ மரணம் துன்பகரமாயிருக்காது. அகால மரணமும், துர்மரணமும் சாகிறவர்களுக்கும் இவர்களை ஆச்ரயித்திருப்பவர்களுக்கும் கஷ்டத்தையும், நஷ்டத்தையும் உண்டாக்குகின்றன. சுபாவ

மரணம் இருத்ரத்தாருக்கும் கஷ்ட நஷ்டங்களை உண்டாக் காது. அகால மரணமென்பது காற்றடிக்க மரத்திலிருந்து பூப்பிஞ்சு காய்க்கனிகள் உதிர்வதைப்போன்றது. துர்மர ணம் பூப் பிஞ்சு காய்க் கனிகளைக் கற்களாலடித்து வீழ்த்து வதைப்போன்றது. சுபாவ மரணம் பழுத்த பழம் காம்பை விட்டு விலகுவதைப் போன்றது.

எது எப்படி யிருப்பினும், உடல் உயிர் பெற்று வளரும் ஒவ்வோர் ஜீவனின் வாழ்வானது புசிப்பு நிமித்தம் தன் கூட்டை விட்டு வெளிப்பட்ட பறவை பொழுது சாயுமுன் திரும்பவும் தன் கூட்டிற்கு வந்து சேருவதென்பது எப்படி நம்பத்தகாத விஷயமோ அப்படியாகத்தா னிருக்கின்றது. நிமிஷத்திற்கு நிமிஷம் அநேக உயிர்கள் சாகின்றன; அநேக உயிர்கள் பிறக்கின்றன. ஒருவன் சாவதைப்பார்க்கும் நாம், நமக்கும் இக் கதிதான் என்று நினைப்போம். கவலைப்படு வோம். ஆனாலும் உடனேமறந்துவிட்டு எப்போதும் இருப் பவர்களாகவே நமக்குரிய அலுவல்களை நடத்துகிறதுமல்லா மல் இருநூறு முன்னூறு வருஷங்களுக்கான விஷயங்களைப் பற்றி சிந்தித்து, சிந்தித்தபடி செய்துமுடிக்க முயற்சியும் செய்கிறோம். இவ்வித மறதியும், சத்தியபுத்தியும் இல்லாவிட் டால் இவ்வுலகில் எந்த ஜீவனுக்குத்தான் இன்பமென்பது உண்டு? யார்தான் ஒருநிமைப்பொழுதேனும் கண்ணுறங்கு வார்? இவ்வித மறதியும், சத்தியபுத்தியும் இல்லாவிட்டால் எவன்தான் இவ்வுலகவாழ்வை விரும்புவன்?

இவை நிற்க, யோகிகள் ஸ்தூலதேகத்திலிருந்து சூக்ஷ் மதேகத்தையும், சூக்ஷ்மதேகத்திலிருந்து காரண தேகத்தை யும் பிரித்துக் காரண தேகத்தை யோகாக்கினியால் கொளுத்தித் தனித்திருக்க வல்லவர்களென்று முன்னம் சொ ன்னோமல்லவா? யோகிகள் என்போர் யார்? இவர்களுக்கு

இச்சக்தி எப்படி வந்தது? எதற்காக அவர்கள் இதற்கான வித்தைகளைக் கற்றனர்? மற்றெல்லாரும் இவர்களைப் போல் யோக சித்திகளைப் பெறமுடியுமா? என்பவைகளைப் பற்றி கவனிப்போமாக.

மரணத்தின் இரகசியத்தைத் தெரிந்து கொள்ள விரும்பித் தான் எப்போதும் சாகாதவன் என்று தெரிந்து கொண்டவன் யோகி. கடவுளைப் பார்க்க வேண்டுமென்று காதல் பூட்டுத் தன்னில் 'நான்' என்னும் சொல்லுக்குப் பொருளாயிருப்பது ஏதுவோ அதுதான் கடவுள் என்று அறிந்தனுபவித்தவன் யோகி.

யோகசித்தி பெற்றுள்ள ஓர் மகானின் கிருபாகடாக்ஷத்திற்காளாகி, அவர் அனுக்கிரகிக்கிறபடி யோக சாதனைகளைப் பழகுகிறவன் காலக்கிரமத்தில் தன் ஸ்தூலதேகத்திற்கப்பாற்பட்டு அத்தூல சரீரத்தைத் தன்னினும் வேறுகப்பார்ப்பன். இவ்வாறே பக்குவ காலத்தில் சூக்ஷ்ம சரீரத்திற்குவேறுன சாக்ஷி தானென பார்ப்பான். இவன் சூக்ஷ்மசரீரத்தைத் தன்னினும் வேறுகப் பார்ப்பது தன் காரண சரீரத்தின் உதவியால் தான். காரண சரீரமில்லாவிட்டால் எதையும் பார்க்க முடியாது. கடவுளைப்பார்க்கவேண்டுமென்கிற முதல் எண்ணம்தான் இவ்விடத்தில் யோகாக்கினி என்று சொல்லப்படுவது. யோகாப்பியாசியின் பழுத்த இவ்வெண்ணமானது காரண சரீரத்தைக் கொளுத்துகிறது.

தான் கிஞ்சிஞ்ஞனென்றும், தான் ஜீவனென்றும் தான் பிறப்பிற்கும், இறப்பிற்கும் உரியவனென்றும் ஒவ்வொருவரையும் நினைக்கச் செய்வது இக்காரண சரீரமேயாகும். யோகாக்கினியால் காரண சரீரம் கொளுத்தப்படுகிறதென்பது உயிர்பிறிந்த உடலைக் கொளுத்திச் சாம்பராக்குவதைப் போலன்று. செம்பைப் பொன்னுக்கும் முறையைப்போன்

றது. அல்லது பொன்னைக் காய்ச்சி மாற்றுயரச் செய்வதைப் போன்றது. யோகாக்கினியினல் கொளுத்தப்படும் யோகியின் காரண சரீரமானது அருள்வடிவாக மாற்றப்படுகிறது. அருளுருவத்தை அடைந்த யோகாரூடன் ஞானக் கண்ணைப் பெற்றவனுகிருன். ஞானக்கண்ணுல் பார்க்கப்படும் தன் அருள் வடிவம் அகண்ட அருள் வெளி அல்லது சிதாகாயம் என்று ஞானிகளால் சொல்லப்படுகின்றது. ஞானப் பிரகாச அருள் வெளியைப் பார்க்கும் யோகாரூடன் ஞானி என்றழைக்கப் படுகிருன். இந்த ஞானி தன் ஞானக்கண்ணுல் பார்க்கும் அருள்வெளியின் மைய உருவாக இருக்கிருன். இவ்வருள் வெளியை ஞானியின் தேஜஸ் என்றும் சொல்லலாம். இவ்வருள் வெளியைத் தன் ஞானக் கண்ணுல் பார்க்கும் ஞானிக்குத் தன்னினும் வேருன தொன்றும் காணப்படாத காரணத்தால் இருப்பவன் இவனெருவனே. ஞானப்பிரகாச அகண்ட அருள் வெளி ஞானியைக் காட்டிலும் வேருகாது. சூரியப் பிரகாசம் சூரியனைக் காட்டிலும் வேருன தென்று சொல்லுவோமா?

அகண்ட அருள் வெளியைத் தன் தேஜஸ்ஸாக உடைய ஞானி பரிபூரணன். பரிபூரண ஞானவான் ஒப்பற்ற ஒருவனே. ஒப்பற்ற ஒருவன் தன் அருள் நிலையில் யாரோடு என்னத்தைப் பேசுவான். யாரை அல்லது எதைக் கண்டு பயப்படுவான். இவன் ஏகன். நிர்ப்பயன். பரிபூரண ஞானவான். சதானந்தன். பரிபூரண ஞானத்தையும், ஆனந்தத்தையும் சொரூபமாக உடைய ஞானி சத் சித் ஆனந்தன். சத் சித் ஆனந்தனை ஆத்மாவென்று வேதங்கள் கூறுகின்றன. ஆகவே யோகாரூடனை ஞானி தன்னைச் சத் சித் ஆனந்த ஆத்மாவென கண்டுகொண்டவன். தேகங்கள் சாவுக்குரியவை. ஆத்மாவிற்குச் சாவு கிடையாது. தன்னை ஆத்மாவெனப்

பார்த்து, சிதானந்தனை இருக்கப்பட்ட ஆத்மஞானி தேகத் தோடிருந்தாலும், தான் சாகிறவனென்று நினைக்க மாட்டான். சாகிறேன் என்கிற நினைப்பில்லாதபோது பிறக்கிறேன் என் கிற நினைப்பும் அற்றுப்போகிறது. மரணத்தின் இரகசியத் தைக் கேட்ட நசிகேதுவுக்கு இயம தருமராஜன் உபதேசித் ததும் இந்த ஆத்மோபதேச ஞானமேயாகும்.

ஞானியின் அகண்ட அருள் வெளியில்தான் பூலோக மும், புவர்லோகமும், சுவர்க்கலோகமும், மற்றெல்லா உலக ங்களும் ஆகாயத்தில் சூரிய சந்திர நக்ஷத்திரங்களைப் போல் மிதந்து கொண்டிருக்கின்றன. பூலோகத்தவர்களும், புவர் லோகத்தவர்களும், சுவர்க்கலோகத்தவர்களும், மற்றெல்லா உலகத்தவர்களும் யாரைக் கடவுளென்று கும்பிடுகிறார்களோ அவர் இவர்தான். இவர் தன் அருள் வெளியின் மூலமாக ஒவ்வோர் உயிரின் உள்ளத்தில் ஆத்ம ரூபமாகக் குடியிருந்து அவ் வவ்வுயிரின் அந்தக்கரணத்தின் குண குணங்களின்படி எல்லாவிதத் தொழில்களையும் இரவும், பகலும் ஓய்ச்சல் ஒழி வின்றி ஒவ்வொன்றையும் செய்வித்துக் கொண்டிருக்கிறார். வேதங்களில் புகழப்பட்டுள்ளவரும் இவரே. இவருக்குப் பயந்துதான் பஞ்சபூதங்களும் தன் தன் தொழில்களைச் செய்கின்றன. மனதும் நினைக்கின்றது. சர்வ ஜீவாத்மாக் களும் தேடி அடையக்கூடிய ஒப்பற்ற ஒருவர் இவரே.

காரண சரீரத்தை அருள் வெளியாக மாற்றிப் பார்க்கும் யோகியின் ஸ்தூல தேகமும், சூக்ஷ்மதேகமும் பிறிந்திருந் தாகக் காணப்படினும் தூக்கத்திலிருப்பதைப்போல தேகங் களின் சம்பந்தம் அறுபடாத காரணத்தால் அருளுருவாக நிற்கும் ஞானி மறுபடியும் தேக நிலையில் விழிக்க வல்லவனு கிறான். தன் காரண சரீரத்தை அருள் வடிவாக மாற்றிக் கொண்டதின் பலனாக தேக இந்திரிய பிராண மனுதிகள்

மூலமாக வெளிப்படுவதெல்லாம் ஞானமும், அன்புமே யாகும். காலக்கிரமத்தில் இந்த ஞானியின் ஸ்தூல, சூக்ஷ்ம தேகங்களும் அருளுருவாக மாறிவிடும்.

இவர் பக்தர்களால் சூழப்படும் பகவான். இவர் பேசியும் பேசாதவர். ஏனென்றால் இவர் நினைப்பதும் பேசுவதும் பக்தர்களுடைய மனதையும், வாக்கையும் கொண்டே. பகவத் பிரியத்திற்குத் தன்னை ஆளாக்கவல்ல பரோபகார குண நடத்தைகளையுடைய தர்மிஷ்டன்தான் பகவதானுக்கிரக பலத்தால் பகவத் சொரூபதரிசனம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் உதிக்கப்பெற்றுப் பாரமார்த்திக ஞானியின் அனுக்கிரகத்திற்காளாகி யோகாப்பியாசம் செய்வனே ஒழிய மற்றவர்களுக்கு இவ்வெண்ணம் உதிப்பதே மகா அருமை.

மனிதர்களாகிய நாம் ஆண் ஆனாலும் சரி, பெண்ணானாலும் சரி ஒவ்வொருவரும் நான் நான் என்கிறோம். சில சமயங்களில் நான்தான் என்று ஒரு சொல்லை இரட்டித்து அழுத்தமாகவும் சொல்லுகிறோம். இந்த நான் என்கிற சொல்லுக்குப் பொருளாயிருப்பது தேகமா? மனதா? ஆத்மாவா? இந்த நான் என்கிற சொல்லுக்குப் பொருளாயிருப்பது ஆத்மாதான் என்று மரணத்தின் இரகசியத்தையும், நசிகேதுவுக்கும் இயமதருமராஜனுக்கும் நடந்துள்ள சம்பாஷணையையும் படிக்கிறவர்கள் நிச்சயிக்கலாம்.

நான் என்பதற்குப் பொருளாயிருப்பது தேகமென்போமானால் தேகம் சாவுக்குரியதாயிருக்கிறது. நான் என்பதற்குப் பொருளாயிருப்பது மனமென்று சொல்லுவோமானால் மோக்ஷமடைய விரும்பி பக்தி கரும ஞான யோகசாதனைகளைப் பழகுகிறவர்களுடைய மனம் சுத்த அருள்வெளியாக மாற்றப்படுகிற அனுபவத்தால் மனமும் சாவுக்குரியதேயாகி

றது. ஆகையால், தேகமும் மனமும் நான் என்கிற சொல் லுக்குப் பொருளாயிருப்பதல்ல. அகண்ட பிரகாச சொரூப அருள்வெளி யாருடைய தேஜஸ்ஸோ, அவரே நான் என்கிற சொல்லுக்குப் பொளாயிருக்கிறவர் என்று அறியக் கடவோ மாக.

அகண்டப்பிரகாச சொரூப அருள் வெளியைத் தேஜஸ் ஸாக உடைய பரமாத்மாவைக் கடவுளென்றும் சத் சித் ஆனந்த ஒப்பற்ற ஒருவரென்றும் வேதங்களும் மற்றுமுள்ள ஞான நூல்களும் புகழ்கின்றன. யாருடைய மகிமைகளை சிருஷ்டி ஸ்திதி சங்காராதி முத்தொழில்களும் பிரகாசிக்கச் செய்கின்றனவோ, யாரைப்பார்க்க வாலிபர்கள் பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிக்கிறார்களோ, யாரைப்பார்க்க மனிதர் கள் மனைவி மக்கள் வீடு நிலம் நீர் உற்றார் பெற்றார் மற்று முள்ள இவ்வுலக செல்வங்களனைத்தையும் விட்டு தனித்து கடின விரதங்களால் தவசிரேஷ்டர்களாகிறார்களோ, யாரை முன்னிட்டு சுவர்க்கலோக போக வாழ்வும் துச்சமெனக் கருதப்படுகிறதோ அவராகிய பரமாத்மா மன நிலையிலும் தேக நிலையிலும் அண்ட பிண்ட பிரம்மாண்டங்களாகவும் இவைகளி லிருக்கப்பட்ட அனைத்துயிர்களிலும் பலகோடி ஜீவான்மாக் களாகவும் ஏன், எப்படி ஆகிறார் என்று சிலர் நினைக்கலாம்.

நாம் கடவுளைப்பார்க்க ஆசைப்படுவதைப்போல கடவுள் தன் மகிமைகளைப்பார்க்க இஷ்டப்படும் சங்கல்பமே மனோ விலாச சூக்ஷமப் பிரபஞ்சத்திற்கும், ஜகவிலாச ஸ்தூல பிரபஞ் சங்களுக்கும் காரணமாகின்றது. நம்முடைய முகத்தைப் பார்க்க நாம் கண்ணாடியை உண்டாக்கிக்கொள்வதைப்போல கடவுள் தன் மகிமைகளைப் பார்க்க ஸ்தூல சூக்ஷம ஜகவிலா சத்தைக் கற்பித்து அனைத்துயிர்களின் அந்தக் கரணங்களில்

தன் உருவங்களைப் பார்த்து ஆனந்திக்கிறார். நாம் நம்முடைய சுத்த அந்தக் கரணத்தின் மூலமாகக் கடவுளைப் பார்க்கிறோம். கடவுள் தன் உருவத்தை நம்முடைய அந்தக் கரணத்தின் மூலமாகப் பார்த்தானந்திக்கிறார். நாம் நம்முடைய சுத்த அந்தக் கரணத்தால் கடவுளின் சொரூபத்தைப் பூரண மகிமையுடன் பார்க்கிறோம். கடவுள் நம்முடைய சுத்த அந்தக் கரணத்தின் மூலமாகத்தன்னுடைய சொரூபத்தைப் பூரண மகிமையோடு பார்க்கிறார்...

தன்னுடைய சுகானுபவத்தின் பொருட்டு அவரால் சிருஷ்டித்து பாதுகாக்கப்படும் இவ்வுலகம் பெரும் பாலோருக்குத் துன்பகரமாயிருக்கும் காரணம் யாதாயிருக்குமென்று சிலர் சந்தேகப்படலாம். பரிபூரண அறிவாளியும் இன்புருவினருமான கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவை அனைத்தும் இன்பகரமாகவே இருக்குமல்லது துன்பகரமாயிருக்காது.

எல்லாம் கடவுளை நாடி அன்பிலும் அறிவிலும் வளர்வதைப் பார்க்கிறோம். மரணமானது அறிவிலும், அன்பிலும் அபிவிருத்தியாகும் ஜீவான்மாக்களுக்கு அறிவையும் அன்பையும் பூரணப்படுத்திக் கொள்வதற்கான அனுகூலங்களைக் கொடுத்துதவும் பேருபகாரி என்று முன்னமே சொல்லப்பட்டது. அன்பிலும், அறிவிலும் வளர்கிறவன் தன் காரியங்களுக்கு விக்கினங்களைச் செய்யும் குறைந்த அறிவாளிகளின் கூட்டத்திலிருந்து விலகலாம். இவ்வித பிறிவினை இருதரத்தாருக்கும் அசம்மதமேயாயினும் வினையின் பயன் அறிவை நாடினவனுடைய சௌகரியத்தின் நிமித்தம் அவனை விடுவிக்கிறது. விடுப்பட்டவன் சந்தோஷப்படலாம். இழந்தவர் விசனப்படலாம்.

ஒருவன் தன் சுகானுபவத்தின் பொருட்டு ஒரு காலத்தில் செய்துகொண்ட ஏற்பாடுகளனைத்தும் தான் அறிவில் வளர்ந்தபோது முன்னம் தனக்குச் சுககரமாயிருந்தவை அனைத்தும் துன்பகரமாகக் காணப்படலாம். தற்கால அறிவுக்கேற்றபடி தன் சுகானுபவத்திற்குரியவைகளைச் சம்பாதிக்க வேண்டிவரும். இவ்வித முயற்சியில் மற்றவர்களால் தடைகள் வந்தெதிர்கலாம். இவன் தன்னறிவின் வலிவால் இத்தடைகளை வெல்லும் செயல் கஷ்டமாகவும் துன்ப கரமாகவும் காணப்படலாம். அறிவின் அபிவிருத்தியாலும், அன்பின் பெருக்காலும், அடையக்கூடிய ஆன்மலாபத்தை முன்னிட்டு இவ்வித கஷ்ட நஷ்ட நிஷ்டூரங்களும் துன்பங்களும் க்ஷணப்போதியவைகளேயாகின்றன.

விளையாடும் சிறுவன் படிப்பினிமித்தம் விளையாட்டை விட்டுவிடுகிறான். படிக்கும் வாலிபன் உத்தியோகத்தினிமித்தம் படிப்பை முடித்துக் கொள்கிறான். தன்னை ஆச்ரயித்திருக்கிறவர்களைக் காக்கும் நிமித்தம் மனிதன் தன் வருமானத்தைச் செலவு செய்கிறான். அறிவிலும் அன்பிலும் வளரும் ஞானவான் ஆன்மலாபத்தினிமித்தம் மற்றெல்லாவற்றையும் தியாகம் செய்ய அல்லது துறக்கத் துணிவுடையவனாகிறான். ஏனென்றால், ஆன்ம சுகம் மற்றெல்லாவற்றிலும் மேலானதும், சாசுவதமானது. ஆன்ம சுகம் நிகரற்றது. போட்டியில்லாதது.

தன் குடும்ப விவகாரங்களோடு திருப்தனுயிராமல் ஊரார் வழக்குகளை எல்லாம் விலைக்கு வாங்கித் தன்மனதிற்கும் தேகத்திற்கும் ஓயாமல் வேலை கொடுக்கும் ஒருவனுடைய மனம் திடீரென அந்தர் முகப் பட்டு ஆத்ம சாமீப்பியத்தால் அவன் சாந்தியை அனுபவித்து விட்டால் அன்னிய நினைப்பை நினைக்கவும், அன்னிய பேச்சைப் பேசவும் சகி

யான். சாந்த சொரூபரும், சுகபுருஷரும், பூரண அறிவாளியு மான கடவுளைத் தரிசித்தவனெவனோ அவன் சாந்த சித்தனாக வும், சுகபுருஷனாகவும், பூரண அறிவாளியாகவும் பிரகாசித் துத் தன்னிடம் வரப்பட்டவர்களுடைய சந்தேகங்களைப் போக்கும் ஞான சூரியனாகவும் தன் உருவைத் தியானிக்கும் பக்தர்களுடைய மனவழுக்கைப் போக்கி சாந்தானந்தத்தை அனுபவிக்கச் செய்யும் சாந்தமூர்த்தியாகவுமிருக்கிறபடியால் இவனுடைய நினைப்பும், பேச்சும், செயலும் இன்பகரமாயி ருக்குமல்லது துன்பகரமாயிருக்காது.

மனிதர்கள் தமது அறிவின் அறைகுறைவாலும் அன் பின் அறைகுறைவாலும் இவ்வுலகக் காட்சியையும், இவ்வுலக வாழ்வையும் துன்பகரமாகவும் சுகதுக்கக் கலப்புடையதாக வும் காண்கின்றனரல்லது பூரண கடவுளறிவைக் கொண்டும் கடவுளன்பைக்கொண்டும் பார்க்கும்போது எல்லாம் கணக் குடனும், ஒழுங்காகவும் பூரண அறிவாளியும், அன்பருமான கடவுளால் அமைக்கப்பட்ட இன்பகரமான திருக்காட்சி எனவே கண்டானந்திப்பர்.

இப்புத்தகத்தில் இயமதருமராஜன் நசிகேதுக்குச் சொல் லி யிருப்பதைப் போலவே பரமார்த்த ஆத்ம ஞானிகளும் இருப்பது பரமாத்ம சொரூபம் ஒன்றே. ஜெகஜீவர்கள் கற் பனைகள்; இருக்கும் பிரம்மத்தால் ஜெக ஜீவர்கள் இருப்பவை கள் போலக் காணப்படுகின்றன ; பிரம்மத்தை விட்டு இவை கட்குப் பிரத்தியேகமான இருப்புக் கிடையாது ; பிரம்மமே ஜீவான்மாக்களாகவும், ஜகதாகாரமாகவும் ஆயினர் என்று சொல்லுகிறார்கள். சுருதிகளின் கருத்தும் இவ்வாறே இருக் கக் காண்கிறோம்.

ஒருவர் எப்படி கோடானுகோடி பேத உருவங்களா யுள்ள உலகங்களாகவும், ஜீவான்மாக்களாகவும் ஆயினர் என்

பது பலர் வியக்கத்தக்க விஷயமே. தனித்திருக்கும் ஒரு வன் யாதோ ஓர் எண்ணத்தைச் சங்கல்பித்துக் கொள்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். இந்த எண்ணத்தை ஒட்டி மற்றெல்லா எண்ணங்களும் ஒன்றன்பின் ஒன்ருக வந்து சேருகின்றன. இவன் இவ்வெண்ணங்க ளெல்லாவற்றையும் ஓர் சபையார் முன் தெரியப்படுத்த இஷ்டப்படுகிறுன். இவன் நினைத்தபடி ஓர் சபை கூடப்படுகிறது. இவன் இச்சபையார் முன் தன் எண்ணங்களை எல்லாம் வாக்ரூபமாகச் சொல்லு கிறுன். தான் பேசும்போது தான் பேசுவதை சாக்ஷியாக நின்று கவனிக்கிறுன். பேசப்பட்டவை சரியானதாயிருந் தால் ஆமோதித்துக் கொள்கிறுன். தவறுதலாயிருந்தால் திருந்துகிறுன். ஒருவனுடைய இச்செயலில் ஒருவன் இரு வராகிறுர்கள். பேசுகிறவன் ஒருவன். பேசுகிறவனைக் கவ னித்துத் திருத்துகிறவன் மற்ருெருவன். கவனித்துத் திருத்துகிறவன் சாக்ஷி. திருத்தப்படுகிறவன் ஜீவன். சாக்ஷி எஜமானன். ஜீவன் வேலைக்காரன். எஜமானனுகிய கடவுள் ஸர்வக்ஞன். ஸர்வ வல்லமையுடையவன். ஜீவன் கிஞ்சி ஞன். கடவுளால் நடத்தப்படுகிறவன்.

சொல்ல நினைத்தவைகளை எல்லாம் சொல்லிவிட்ட பிறகு ஜீவன் பிரசங்கத்தை நிறுத்துகிறுன். சொல்ல நினைத் தவைகளை எல்லாம் சொல்லச் செய்தாய்விட்ட பிறகு கட வுள் மனிதனைச் சும்மா இருக்கச்செய்கிறுர். சபை கலைந்து விடுகின்றது. மனிதன் சாந்தமாக சும்மா இருக்கிறுன். சும்மா இருக்கையில் ஜீவன் சாக்ஷியில் ஐக்கிய மாகிறுன். அதாவது ஜீவன் சாக்ஷி என்கிற இருவர் போய் பிரம்மம் மாத்திரம் இருக்கிறது. பிரம்மம் சங்கல்பசகிதராகும் போது ஜீவான்மாக்கள், உலகங்கள் சிருஷ்டித்து பாதுகாக்கப் படுகின்றன. பிரம்மம் சங்கல்பரகிதராகும்போது ஜீவான்

மாக்கள் மறைபட்டுப்போக பிரம்மம்தான் இருக்கிறது. பரமாத்ம சொரூபத்தை ஒருவன் தரிசிக்கும்போது இவ்வுண்மை நன்ருக விளக்கமாகும். எவன் பரமாத்ம சொரூபத்தை தரிசிக்கிருனே அவன் சொரூப தரிசனத்தின்போது பிரம்மம் தாஞகித் தன்னை தரிசிக்கிருன்.

பிரம்மம் தாஞகித் தன்னைத் தரிசிக்கும் ஆத்ம பரமாத்ம நிலையைத் துரிய மென்பர். பிரம்மம் சங்கல்ப சகிதராகையில் அவர் சுழுத்தி நிலையை அடைகிருர். பிரம்மம் ஜீவஞகி நினைப்பும் பேச்சும் செயலுடையவராகையில் சூக்ஷம ஸ்தூல நிலைகளை அடைந்தவராகிருர்.

காண்பான், காட்சி, காணப்படுபொருள் இம் மூன்றில் காண்பான் சாட்சி. காட்சி, சாட்சியாகிய பிரம்மப் பிரகாசம். காணப்படும் பொருளைக் காண்பது இப்பிரகாசத்தால் தான். சுழுத்திக்கு சாக்ஷி கடவுள். சுழுத்தியை அஞ்ஞானம் மூலப்பிரக்ருதி அவ்வியக்தம் என்றுரைப்பர். இதுதான் அனைத்துலகங்களுக்கும் அனைத்துடல்களுக்கும் உபாதான காரணம், மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகாயம் வாயு தேயு அப்பு பிருதிவியாகப் பரிணமித்துக் காணப்படுவதும் இம்மூலப் பிரக்ருதியே. பிரம்ம சொரூப தரிசனம் பெருத ஜீவாத்மாக்களனைத்தும் தூக்கத்தின்போதும், மரணத்தின் போதும் இந்த மூலப்பிரக்ருதியில் லயமாகிருர்கள். இம்மூலப்பிரக்ருதி ஜடத்தன்மையுடையதாயினும் சித்சொரூப ஆத்ம சாமீப்பியத்தால் சித்துடையதாகி காரண காரிய முறையில் எல்லா காரியங்களுக்கும் காரணமாயிருக்கிறது. இப் பிரக்ருதிக்குத் தாயும், தந்தையுமாயிருப்பது பிரம்ம சங்கல்பமே. இப்பிரம்மம் மனமில்லாதவராயினும் நினைக்கவல்லவர். இந்திரியங்களில்லாதவராயினும் இந்திரிய சுகானுபவ உணர் உடையவர். துரிய நிலையில் இவர் தாஞகயிருக்கிருர்.

சுழுத்தி அல்லது சமாதிகாலத்தில் இவர் பிரக்ருதிக்கு சாக்ஷி. மனோவிலாச சூக்ஷ்ம நிலையில் சூக்ஷ்மப்பிரபஞ்சங்களையும் இவைகளிலிருக்கப்பட்ட அனைத்தாத்மாக்களையும் சிருஷ்டித்துக்காத்தழிக்கும் கடவுள் இவர். ஸ்தூல இவ்வுலக நிலையில் ஸ்தூலப்பிரபஞ்சத்தையும் இதிலிருக்கப்பட்ட அனைத்தாத்மாக்களையும் சிருஷ்டித்துக் காத்து அழிக்கும் பரமேசுவரன் இவர்.

பிருதிவி—பிருதிவிக்குச் சம்பந்தமான பொருள்களையும், அப்பு—அப்புவுக்குச் சம்பந்தமான பொருள்களையும், தேயு—தேயுவுக்குச் சம்பந்தமான பொருள்களையும், வாயு—வாயுவுக்குச்சம்பந்தமான பொருள்களையும், ஆகாயம்—ஆகாயத்திற்குச் சம்பந்தமான பொருள்களையும், மனம்—மனத்திற்கு சம்பந்தமான பொருள்களையும், புத்தி—புத்திக்குச் சம்பந்தமான பொருள்களையும், சித்தம்--சித்தத்திற்குச் சம்பந்தமான பொருள்களையும், அகங்காரம்—அகங்காரத்திற்குச் சம்பந்தமான பொருள்களையும் தன் அறிவைக்கொண்டு நானல்ல நானல்லவென்று விவேகித்துத் தள்ளி தானான தன்மயப் பிரகாச அகண்ட அருள் வெளிக்கு மைய உருவாயிருக்கத் தன்னைப்பார்க்கிறவனெவனோ அவனே பரமாத்மன். அவனே கடவுள். அவனே பரப்பிரம்மம். அவனைவிட இரண்டாவதொரு பொருளுமில்லையாகையால் அவன் நிர்ப்பயன். பிறப்பற்றவன். சாவில்லாதவன். நித்தியன். கடவுளறிவுடைய ஒவ்வோர் ஆணும், பெண்ணும், ஆத்ம உணர் உடைய ஒவ்வோர் ஆணும், பெண்ணும் இன்னிலையை அடைய முயற்சி செய்வாராக.

ஓம். தத். ஸத்.

---

# நசிகேதுக்கும் எமதருமராஜனுக்கும் நடந்த சம்பாஷணை.

---

ஒரு காலத்தில் ஒருவன் பெருத்த யாகமொன்றைச் செய்தான். இந்த யாகத்தில் அவன் தன்னுடையவை என்பதை எல்லாம் தானமாகக் கொடுத்துவிட வேண்டுமென்கிற வேத விதி. பெரிய யாகத்தைச் செய்தவன் என்கிற பெயரையும் பட்டத்தையும் சம்பாதித்துக் கொள்ளலாமென்கிற எண்ண முடையோனுலும், அவன் வேத முறைப்படி தானம் செய்ய இஷ்டப்படவில்லை. அவன் செல்வவந்தனுயினும் உலோப குணமுடையவன் முன்னுக்கு ஓர் துளிபால் கூட கொடுக்க் யோக்கியதை யில்லாத குருடும் நொண்டியுமான கிழப் பசுக்களைப் பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுத்தான். மற்றைய தானதருமங்களையும் அறை குறையாகவே செய்தான்.

அவனுக்கோர் பிள்ளை யிருந்தான். அப்பிள்ளையின் பெயர் நசிகேது. இவன் மகா புத்திசாலியான வாலிபன். இவனுடைய தகப்பனுர் செய்த யாகத்தில் அவனுல் கொடுக்கப்படும் அறை குறைவான தானதருமங்களால் அவனுக்கு வரக்கூடிய பாவங்களுக்காக நசிகேது விசனப்பட்டான். புண்ணியத்தை விரும்பிச் செய்யும் காரியத்தில் பாவத்தைத் தன் தகப்பனுர் சுலபமாகச் சம்பாதித்துக் கொள்ளுகிறுரே என்று நசிகேது மிகவும் நொந்தான். நசிகேது தன் தகப்பனுரிடம் போய், அப்பா! என்னை யாருக்குத்தானம் செய்யப் போகிறீர் என்றுன். தகப்பன் தன் குற்றத்தை உணர்ந்து பதில் பேசவில்லை. நசிகேது கேட்டதையே மறுபடியும் இர

ண்டு மூன்று தரம் கேட்டான். தகப்பனுக்குக் கோபம்பிறந்து அடே! நான் உன்னை இயமனுக்குக் கொடுத்தேன் போ என் முன் நில்லாதே என்று பதில் சொன்னான்.

நசிகேது தவத்தில் மிக்கோனாயிருந்தபடியால், உடனே இயமனை நாடி இயமலோகத்திற்குச் சென்றான். நசிகேது போனபோது இயமன் வீட்டிலில்லை. தன் அலுவலாக அவன் எங்கேயோ போயிருந்தான். இயமன் வருகிறவரையில் நசிகேது இயமனுடைய வீட்டில் காத்துக்கொண்டிருந்தான். இவனை எவரும் உபசரிக்கவில்லை. இவன் அவ்விடத்தில் பட்டினியாக இருக்க நேர்ந்தது. மூன்றும் நாள் இயமன் வந்தான். நசிகேதுவைப் பார்த்தான். என்னுடைய முயற்சியின்றி இவனே என்னிடம்வர இவன் எத்தகைய மகிமையுள்ளவனோ என்று இயமன் நினைத்தான். தன் வீட்டிற்கு விருந்தினனாக வந்த இவன் மூன்று நாட்களாக உபசரிக்கப்படவில்லை என்று இயமனுக்குத் தெரிந்தது. தன் வீட்டிற்கு வந்த அதிதியைப் பசிக்கவிட்டு தான் உண்பவன் தன் புண்ணிய பலனனைத்தையும் இழந்துவிடுகிறான் என்பது சாஸ்திர சம்மதம். இயமன் பயந்து நசிகேதுவைப் பார்த்து, ஓ நசிகேதா! நீர் என் வீட்டிற்கு அதிதியாக வந்தீர். நான் வீட்டிலில்லாக் குறைவால் நீர் அன்னம் தண்ணீரின்றி பட்டினியாக மூன்று நாள் கழித்தீர். நான் உமக்கபசாரம் செய்தவனானேன். நான் இவ்வபசாரப் பாவத்தினின்று விடுபட உமக்கு மூன்று வரங்கள் தருகிறேன். உமக்கு வேண்டியவைகளைக் கேள் என்றான்.

நசிகேது:—ஐயா, என் தகப்பனாருக்கு என்னிடம் உண்டாயிருக்கும் கோபம் நீங்கி, நான் திரும்பி அவரிடம் போகும்போது அவர் என்னை புத்திரவாஞ்சையோடு ஏற்றுக்கொள்ளுமாறு அனுக்கிரகம் செய்யுங்கள். இது முதல் வரமாக இருக்கட்டும். எவ்விதங்களாகச் செய்யும் யாகத்தால்

மனிதன் சுவர்க்கலோக போகாதிபதியாகிறுனே, அவ்வித யாகத்தைச் செய்யும் முறைகளைப்பற்றி தெளிவாக எனக்குத் தெரியச் செய்வீராக. இது இரண்டாவது வரமாக இருக் கட்டும்.

இயமன் :—ஓ நசிகேதா! உன் தகப்பனுருக்கு உன்மே லுண்டான கோபம் நீங்கக்கடவது. நீ அவரிடம் திரும்பிப் போகும்போது அவர் உன்னை அன்புடன் ஏற்றுக்கொள்வா ராக. ஓ நசிகேதா! நீ கேட்ட யாகத்தைப்பற்றி நான் சொல் வதை எல்லாம் மனதில் தரித்துக்கொள்வாயாக. இந்த யாகத்தைப் பற்றியவை அனைத்தும் உன்னுல் என்னிடமிரு ந்து வெளியாக்கப் பட்டபடியால், இஃது நசிகேது யாக மென்று உன் பெயரால் நடத்தப்படக்கடவது. மூன்று வது வரத்தைக் கேள்.

நசிகேது :—ஐயா, செத்தபிறகு மனிதன் இருக்கிறுன் என்கிறுர்கள் சிலர். செத்தபிறகு மனிதன் இல்லாமல் போகிறுன் என்கிறுர்கள் சிலர். இவ்விரு அபிப்பிராயங்க ளில் நிஜமானது எது?

இயமதருமராஜன் :—ஓ நசிகேதா! தேவர்கள் முற்காலத் தில் இந்த இரகசியத்தை அறிய அதிக கஷ்டப்பட்டிருக்கிறுர் கள். இவ்விஷயம் மிகவும் சூக்ஷ்மமானது. சுலபமாகத் தெரி ந்து கொள்ளக்கூடியதல்ல. வேறெதையாவது கேள். என் னைக் கஷ்டப்படுத்தவேண்டாம். இவ்வரத்தைமட்டும் கேட்க வேண்டாம்.

நசிகேது :—இவ்விஷயத்தைப் பற்றிய சந்தேகம் தேவர் களுக்கும் உண்டென்பது உண்மையே. இதைப்பற்றிய உண்மையை அறிந்து கொள்வது மிகவும் கஷ்டமான தென் பதும் வாஸ்தவமே. இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ள விரும்பும் எனக்குத் தங்களைக்காட்டிலும் மேலானவர் யார்

கிடைக்கப் போகிறுர்கள்? இது தான் நான் தங்களுடைய மூன்ருவது வரத்தால் அடையவேண்டிய நன்மை. இதற்குச் சமானமாகத் தங்களைக் கேட்க எனக்கொன்றும் தோன்ற வில்லை. உண்மையில் இதற்கீடானது ஒன்றுமே இல்லை.

இயமதருமராஜன்:—ஓ நசிகேதா! நூறு வயதுவரையில் உயிருடன் பிழைத்திருக்கும்படியான புத்திர பௌத்திரர்கள் உனக்குண்டாகுமாறு கேட்டுக்கொள். மந்தை மந்தையான ஆடு மாடுளும், யானைகளும், குதிரைகளும் உனக்கிருக்க அனுக்கிரகம் செய்கிறேன். பொன் பெருத்திருக்க வரமளிக் கிறேன். நீ எவ்வளவு காலம் உயிருடனிருந்து பூமி முழுவதை யும் ஒரு குடையின் கீழ் அரசாள இஷ்டப்படுகிருயோ, அவ்வ ளவுகாலம் பிழைத்திருக்க வாக்குதானம் செய்கிறேன். சங்கீ தத்தாலும், சரசவிளையாட்டுகளாலும் எவரையும் களிக்கச் செய்யவல்ல இத்தேவலோகத்து அழகிய பெண்களை அவர் களுக்குண்டான தேர் வாத்தியக்கருவிகளுடன் உன்னேடு அனுப்பிவைக்கிறேன். இவர்கள் மனிதர்களுக்குக் கிடைக் கக் கூடியவர்களல்லராயினும், நான் இக்கன்னிகைகளை உனக் குத் தருகிறேன். மனிதர்கள் விரும்பி அடைவதற் கசாத் தியமான சுகபோகங்களை எல்லாம் நான் உனக்களிக்கிறேன். நீ இவைகளைச் சுகமாக அனுபவிப்பாயாக.

நசிகேது:—அன்புள்ள ஐயா! மேற்சொல்லப்பட்டவை அனைத்தும் சொற்பகாலம் நிலைத்திருக்கும் சுபாவ முடையவை. இந்திரியங்களின் வலிவை அழிக்கும் குண முள்ளவை. எவ்வளவு வளர்த்திஞலும், மனுஷ்ய லோகத் தில் மனிதனது ஆயுள் சொற்பமானதே. ஆடு மாடுகளையும், குதிரைகளையும், நாட்டியப் பெண்களையும், பொன்னையும், தேர் சங்கீதக்கருவிகளையும் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். இவைகள் எனக்கு வேண்டாம். தங்களை தரிசித்தபிறகு இச்

செல்வம் என்னுல் விரும்பப்படுவதாகுமோ? தங்களுடைய அரசாட்சியில் எனக்கு என்னுயிரினிடம் நம்பிக்கை என்பதுண்டாகுமா? நித்திய சொரூபரான தங்களைப் பார்த்த பிறகு நித்திய அநித்தியவஸ்து விவேகமுள்ள நான் சங்கீதத்தாலும், சரச விளையாட்டாலும் வரக்கூடிய சுகத்தைத் துச்சமெனக் கண்டும், பூலோகத்தில் சாவுக்குரிய மனிதர்களில் எப்படி நீண்டகாலம் பிழைத்திருக்கச் சம்மதப்படுவேன்? மண்ணையும், பொன்னையும் பெற்றதனுல் மட்டும் மனிதன் திருப்தனுயிருத்தல் கூடுமா? எனக்கு வேண்டுமானுல், நான் அவைகளைச் சம்பாதித்துக் கொள்வேன். தங்களுடைய தயவைப்பெற்ற எனக்கு இது முடியாத காரியமல்ல. என்னுல் விரும்பப்பட்டதே எனக்கு வேண்டியது. எனக்கு மற்றெதுவும் வேண்டாம். செத்தபிறகு மனிதன் இருக்கிருனு இல்லையா என்கிற இரகசியத்தைப்பற்றித்தான் நசிகேதுவாகிய நான் தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விருப்ப முடையவனுயிருக்கிறேன். எனக்கிஷ்டமான மூன்று வரங்களைக் கேட்டுக் கொள்ளும்படி வாக்களித்துவிட்டு மண்ணையும், பொன்னையும், பெண்களையும் காட்டி மயக்கி அனுப்பிவிட நினைத்தால் நான் தங்களைத் தேடிவந்ததின் பலன் இதுதானு? மரணத்தின் ரகசியத்தைச் தெரியச் செய்வீராக.

இயமதருமராஜன்:—ஓ நசிகேதா! இவ்வுலகில் சிற்றின்பமடையும் வழி, பேரின்பமடையும் வழி யென இரண்டு வழிகள் இருக்கின்றன. சிற்றின்பமடையும் வழியை இருட்பாதையென்றும், பேரின்பமடையும் வழியைப் பகற்பாதையென்றும் கூறுவர். இருட்பாதை அறியாமையிற் பிறந்து இருளில் முடிவடைகிறது. பகற்பாதை அறிவில் பிறந்துப் பிரகாசத்தில் முடிவடைகிறது. இருட்பாதை சுவர்க்கலோகம் வரையில் செல்கின்றது. பகற்பாதை ஆத்ம ரூபத்தில் கலக்

கிறது. இருட்பாதையில் செல்கிறவர்கள் கர்ம பந்தங்களால் கட்டப்படுகிறார்கள். பகற் பாதையில் செல்கிறவர்கள் கர்ம பந்தங்களினின்று விடுபடுகிறார்கள்.

ஓ! நசிகேதா! சிற்றின்பம், பேரின்பம் என்கிற இவ்விரு இன்பங்களும் மனிதர்களைப் பற்பல விதங்களாகக் கவர்ந்திழுக்கின்றன. மேற் சொல்லப்பட்ட இரண்டு வழிகளில் எவன் பேரானந்த பிராப்திக்குரியதை அனுசரிக்கிறானோ, அவனே ஞானவான். எவனொருவன் சிற்றின்பத்தைத்தரும் வழியில் பிரவேசிக்கிறானோ, அவன் சீர்கெட்டு இழிவை அடைகிறான். நசிகேது! நீ மேலானவன். சிற்றின்பங்களைத் தரும் வழிகளில் உன்னை மயக்கித்தள்ள பல விதத்திலும் பார்த்தேன். சிற்றின்ப போகப் பொருள்களனைத்தையும் துச்சமானவை என்று தீர்மானித்தவனாயிருக்கிறாய். சிற்றின்ப விஷய போகத்தைக் காட்டிலும் ஞானமே சிரேஷ்டமானதென்று நீ தெரிந்துகொண்டிருக்கிறாய். ஞானத்திற்கும் அஞ்ஞானத்திற்கும் மத்தியிலிருக்கப்பட்ட பிரதேசமோ மிகவும் அகலமானது. இரண்டாலும் அடையப்படும் முடிவோ, வெவ்வேறானதும் ஒன்றிற்கொன்று விரோதமானதுமாயிருக்கின்றது. எவனொருவன் அஞ்ஞான அந்தகாரத்திலிருந்துகொண்டு உலகச் சிற்றின்ப விஷய போகங்களைப் புசித்து வருகிறானோ, அவன் அறிவில்லா மிருகத்திற்குச் சமானமானவன். அநேகர் அஞ்ஞான அந்தகாரத்தில் மூழ்கியிருந்தும், அவர்கள் தம்மை மஹா ஞானிகளென மதித்து கர்விஷ்டர்களாய் குருடனால் குருடன் நடத்தப்படுவது போல பல சிக்கலான வழிகளில் மேலுமேலும் சுழன்று அலைகிறார்கள். சிலர், மண்ணாங்கட்டிகளைச் சொந்தமாக்கிக் கொண்ட காரணத்தால், அறிவில் வளராத சிறு குழந்தைகளைப்போல் இவ்வுலகத்தைமட்டும் இருக்கிறதென்கிறார்கள்.

மேலுலகத்தை இல்லை என்கிறார்கள். செத்தபிறகு மனிதன் இருக்கிறானா இல்லையா என்கிற கவலையும், விசாரணையும் இவர்கள் உள்ளத்தில் உதிக்கவேமாட்டா. இவர்களுக்கு இவ்வுலகத்தைப் பற்றியும் தெரியாது. பரலோகத்தைப் பற்றியும் தெரியாது. இக்காரணங்களால் இவர்கள் மேலும் மேலும் என் ஆக்கினைக்குட்படுகிறார்கள். நாம் செத்த பிறகு நம்முடைய கதி யாதாமோ என்கிற எண்ணம் உதிக்கப்பெற்றவர்களும், இதைப்பற்றி கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடிய அனுகூலங்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர். இவ்விஷயத்தைப்பற்றி படித்தோ, கேட்டோ தெரிந்துகொண்டுள்ளவர்களும், அனுபவ ஞானக்குறைவால் சந்தேக சித்தர்களாயிருக்கிறார்கள்.

ஓ நசிகேதா! போதகாசிரியர் சாமர்த்தியவானாக இருக்கவேண்டும். அப்படியே போதிக்கப் படுவோனும் தக்க யோக்கியதை யுள்ளவனா யிருக்கவேண்டும். ஞானாசாரியர் தேர்ந்த அனுபவசாலியாக இல்லாவிட்டால், நூறுதரம் சொல்லக்கேட்டாலும், கேட்டவற்றை நூறுதரம் சிந்தித்தாலும் உள்ளத்தில் உண்மை சொரூபம் விளங்கமாட்டாது. சாகிறவனில் சாகாமல் நிற்பது எதுவோ, அது ஆத்மா. ஆத்மாவைப் பார்த்தவன் ஆத்மாவைப் பற்றித் தெரியச் சொல்லலாமல்லது ஆத்மாவைப் பாராதவன ஆத்மாவைப் பற்றி தெரியச்செய்ய முயல்வது நிஷ்பிரயோசனகரமான காரியமாகிறது. ஆத்மாவைப்பார்த்து ஆத்மப்பிரக்ஞையில் நிலைத்துள்ள ஆத்ம ஞானியின் அனுக்கிரகத்தால், ஆத்மாவை அறியலாமே ஒழிய தர்க்க வாதங்களாலும் பிரசங்கங்களாலும் கூட ஆத்மாவை அறிய முடியாது. அனுபவ ஞானியின் சகாயமிருந்தால், ஆத்மாவை சுலபமாக அறிந்துகொள்ள

லாம். ஓ நசிகேது! நீ சரியான பக்குவஸ்தன், உன்னைப் போன்றவன் எனக்குக்கிடைப்பது மகா அருமை.

நசிகேது:—ஐயனே! அழியும்பொருளைக்கொண்டு அழியாப்பொருளை அடைய முடியாதென்று எனக்குத்தெரியும். உலகச் செல்வங்களனைத்தும் நீடித்து நில்லாதவை என்று அறிந்தவனாகையால், தங்களால் அனுக்கிரகிக்கப்பட்ட நசிகேது யாகத்தால் கிடைப்பதாகிய சுவர்க்கலோகாதி பதவியையும் விரும்பாதவனானேன். அழியும் பொருள்களை விட்டுத்தான் அழியாப்பொருளை அடையவேண்டுமென்கிற நிச்சய ஞானத்துடன் தங்களிடம் நிற்பவனானேன்.

இயமதருமராஜன் :—ஓ நசிகேது! எல்லா உலகங்கள் சிருஷ்டிக்கப் படுவதற்குக் காணமாயிருப்பதும், நினைத்தவைகளை நினைத்தபடி கொடுக்கும் இயல்புடையதும், சங்கல்பத்தால் வளரும் குணமுள்ளதும், நற்செயல்களின் பலனை அனுபவிக்க இடமாயிருப்பதும், இளைப்பாற்றிக் கொள்வதற்கேற்ற அதிகவிசாலமான நிர்ப்பயப்பிரதேசமாகிய சொர்க்கலோகத்தையும் இச்சிக்காத வைராக்கிய புருஷன் நீ என்று நான் தெரிந்துகொண்டு உன்பால் அதிகவியப்பும், அன்புமுடையவனானேன். ஓ நசிகேது! வீண் தர்க்கவாதங்களால் உன் மனதைக் கலங்கச் செய்யாதே. சாகிறவனிலும், இருக்கிறவனிலும், பிறக்கிறவனிலும், சாகாமலிருக்கும் ஆத்ம சொரூபம் எதுவோ, அது பரிசுத்த உள்ளத்தில்தான் பிரகாசத்துடன் விளக்கமாகிறது. எல்லா உயிர்களுடைய ஹிருதயக் குகையில் ஜீவாத்ம ரூபங்களாக பிரவேசித்துள்ள பரமாத்ம சொரூபத்தை வெளி நேத்திரங்களால் பார்க்க முடியாது, அந்தர்முக ஞானக் கண்ணால்தான் அவரைப் பார்க்க முடியும். எவன் இந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ளுகிறானோ, அவன் வீணாசைகளை எல்லாம் விட்டு

விட்டு, அதிக சூக்ஷ்மமான ஞானக்கண்ணைப் பெற முயற்சி செய்கிறான். இதுதான் சாகிறவனில் சாகாதவனைப் பார்ப்பதற்கான வழி.

சாகிறவனில் சாகாம லிருக்கப்பட்டவனின் தேகம் சாகிறதே ஒழிய தானாகிய ஆத்மா சாகிறதில்லை. இவர் எப்போதும் இருப்பவர். தேகங்கள் அழியும்போது தான் மாத்திரம் அழியாமலிருக்கிறவர். கொலையாளி கொல்ல முடியுமென்று நினைத்தாலும், கொலையுண்டவன் தான் கொல்லப்பட்டதாக நினைத்தாலும் இருவர்களும் மரணத்தின் இரகசியத்தை அறிந்தவர்களல்லர். ஆத்மா கொலைக் குட்பட்டதல்ல. அதைக்கொல்ல யாராலுமுடியாது. ஆத்மா சிறியதைக்காட்டிலும் சிறியது. பெரியதைக் காட்டிலும் பெரியது. ஒவ்வோர் உயிரின் உள்ளத்தில் வசிப்பது. பாபமற்ற புண்ணிய புருஷனெவனோ, அவன் ஆத்மாவின் அனுக்கிரகத்தால், ஆத்மாவைப் பார்க்கிறான். புண்ணிய புருஷர்களுடைய உள்ளத்தில் ஆத்மா சுயமாகப் பிரகாசிக்கின்றது.

ஆத்மா இருக்குமிடத்திலிருந்தே எங்கும் சஞ்சரிக்கின்றது. எதனிடத்தில் ஒன்றற்கொன்று விரோதமான குணநடத்தைகளெல்லாம் பொருந்தி யிருக்கின்றதோ, அப்பேற்பட்ட ஆத்மாவைப் பரிசுத்த சூக்ஷ்ம திருஷ்டியுள்ள ஞானிகள்தான் பார்க்க வல்லவர். மற்றவர்களால் பார்க்க முடியவே முடியாது. விதேகியாயினும், தேகங்களைத் தரிப்பவர். எதினாலும் தொடமுடியாதவராயினும், எல்லாவற்றின் உள்ளும் புறமும் கலந்துள்ளவர்போல் காணப்படுகிறவர். எங்குமிருக்கிறவர். சர்வ வியாபகமானவர். படிப்பாலும், வேத பாராயணத்தாலேனும், எல்லாவித யுக்திகளுக்கெல்லாம் மேலான யுக்தி சாமர்த்தியத்தாலேனும் ஆத்மாவை அடையமுடியாது. யாரை ஆத்மா தேடுகிறதோ, அவருக்குத்

தான் ஆத்மா காணப்படுகிறது. அவருக்குத்தான் ஆத்மா பூரண மகிமையுடன் பிரசன்னமாகிறது.

எவன் துஷ் கிருத்தியங்களைச் செய்யும் பழக்கமுள்ளவனே, எவனுடைய மனது அமைதி இன்றி சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறதோ, எவனால் பகவத் பக்தி அல்லது ஆத்மத்யானம் செய்யமுடியாதோ, எவனால் மனதை அடக்கமுடியாதோ, எவன் எப்போதும் அலைச்சலுள்ளவனயும் சஞ்சல சித்தமுள்ளவனயுமிருக்கிறனே, அவனால் தன் ஹிருதயாலயத்தில் வீற்றிருக்கும் ஆத்மாவைப் பார்க்கவாவது, அறியவாவது, அனுபவிக்கவாவது முடியாது.

ஓ நசிகேதா! இந்த தேகம் ஓர் இரதத்தைப் போன்றது. ஞானேந்திரியங்கள் அதில் கட்டப்பட்ட குதிரைகள். மனமானது கடிவாளவார். புத்தி கடிவாளத்தைப் பிடித்துள்ள சாரதி. ஆத்மா ரதத்தில் உட்கார்ந்திருப்போன். ஆத்மா சாரதியாகிய புத்தியுடனும், கடிவாளவாராகிய மனதுடனும், குதிரைகளாகிய ஞானேந்திரயங்களுடனும் சேர்ந்துள்ளபோது சுகபோகங்களை அனுபவிக்கிறவராகிறர். எவனுக்குப் பகுத்தறிவு இல்லையோ, எவனுக்கு மனமென்கிற கடிவாளவாரைக் கையாளத் தெரியாதோ, அவனுக்கு அடங்காக்குதிரைகள்போல அவனுடைய இந்திரியங்கள் அடங்கமாட்டா. எவனுக்குப் பகுத்தறிவு இருக்கிறதோ, எவன் மனமென்கிற கடிவாளவாரை ஜாக்கிரதையாகப்பிடித்துக்கொண்டிருப்பனே, அவனுக்கு நல்ல குதிரையில் ஓட்டுகிறவன் இஷ்டப்படி நடப்பதுபோல அவனுடைய இந்திரியங்கள் எப்போதும் சுவாதீனப்பட்டிருக்கும். ஓ நசிகேதா! யாருக்குப் பகுத்தறிவு இருக்கிறதோ, யாருக்கு மனம் சுத்தமாயிருக்கிறதோ, யார் சாந்தசித்தனே, அவன் தன் ஆத்மரூபத்தைப் பார்த்து தான் பிறப்பு இறப்பு இல்லாதவனென தெரிந்துகொள்கிறுன். ஓ நசிகேது! மனமென்கிற கடிவாள

வாரைப் பிடித்துள்ள சாரதியாகிய புத்தியை நன்மார்க்கத்தில் நடத்தும்படி எச்சரிக்கை செய்யும் பழக்கமுள்ள அறிவாளி, கஷ்ட நஷ்டமின்றி சுககரமாகவே பிராண யாத்திரையை முடித்துக் கொண்டு, பரமபதத்தைச் சேர்ந்து பேரானந்தானுபவ முக்தனாகிறான்.

ஓ நசிகேதா! இந்திரியங்களுக்கப்பால் விஷயப் பொருள்களிருக்கின்றன. இவைகளுக்கப்பால் மனதிருக்கிறது. மனதிற்கப்பால் புத்தியிருக்கிறது. புத்திக்கப்பால் ஜீவாத்மா இருக்கிறது. இதற்கப்பால் பரமாத்மா யிருக்கிறார். இவருக்கப்பால் ஒன்றுமே இல்லை. இதுதான் முடிவு. இதுதான் பரமபதம். இதுதான் மோக்ஷஸ்தானம்.

ஆத்மா எல்லாஜீவஜந்துக்களில் மறைபட்டிருக்கிறபடியால், அவர் காணப்படுகிறதில்லை. ஞானக்கண் பெற்றுள்ள ஞானிகள் யாரோ, அவர்கள் அவரைப் பார்க்கிறார்கள். ஆத்மசொரூபத்தைத் தரிசிக்க விரும்பும் அறிவாளி, வாக்கை மனதில் அடக்க வேண்டும். மனதை ஆத்மாவில் கரைக்க வேண்டும். ஆத்மாவைப் பரமாத்மாவோடு ஐக்கியப்படுத்த வேண்டும். ஓ நசிகேதா! இது மிகவும் கஷ்டமான காரியம். வழி தூரமானது. சூக்ஷ்ம திருஷ்டி பெற்றுள்ள மஹான்களால்தான் அதைப் பார்க்க முடியும். அனுபவிக்க முடியும். இவ்வளவு கஷ்டசாத்தியமான காரியமென்று நீ பயப்பட வேண்டாம். விழித்தெழுந்து விடாப்பிடியாக முயற்சிசெய். கோரியபலன் கைகூடும்வரை பின்வாங்கி நில்லாதே. எடுத்துக்கொண்ட இவ்வேலையைச் செய்து முடிப்பது மிகவும் கஷ்டமானதென்றும், கத்தியின் கூர்மையான அலகின்மேல் நடப்பதற்குச் சமானமானதென்றும் மஹரிஷிகள் சொல்லுகிறார்கள்.

சாந்தசொரூபரும், சாசுவதரும், நாஸரகிதரும், ஆதியந்தமில்லாதவரும், உருவமில்லாதவரும், மாறுதலற்றவரும்,

தொடமுடியாதவரும், ருசித்தரியமுடியாதவரும், பெரியதி லும் பெரியதுமான பரமாத்மசொரூபத்தைத் தரிசிக்கிறவ னெவனே, அவன்தான் இயமனுக்கிரையாகாமல் தப்பிப் பிழைக்கிறவன். அவன்தான் புருஷர்களில் உத்தமன்.

ஓ நசிகேது! யாரை வேதங்களெல்லாம் தேடுகின்றன வோ, யாரைப்பார்ப்பதற்காக மனிதர்கள் பலவிதமான தவங் களைச் செய்கின்றனரோ, அப்பரம் பொருளின் பெயரை நான் உனக்குச் சொல்லுகிறேன். அப்பரம புருஷரின்பெயர் 'ஓம்' என்கிற பிரணவம். இந்த நித்திய சாசுவத ஓங்காரமே பிரஹ்மம். இந்த இரகசியத்தை எவன் அறிகிருனே, அவன் தான் நினைக்கிறவைகளையெல்லாம் அடைகிருன்.

ஓ நசிகேது! இந்திரியங்கள் பகிர்முகமுடையவை. இவைகளோடு சம்பந்தப்பட்ட மனிதர்கள் வெளி நோக்குடை யவர்களாயிருக்கிருர்கள். மரணத்தினின்று விடுபட்டு பேரா னந்த நித்திய வாழ்வில், நிலைபெற்றிருக்க பிரியப்படும் ஞானி கள், கண்களை மூடி, அதாவது திருஷ்டியை உள் முகப் படுத்தி, இந்திரியங்களுக்குப் பின்னுலிருக்கப்பட்ட தானை ஆத்மாவைப் பார்த்துத் தன்னை பரமாத்மாவில் ஐக்கியம் செய்கிருர்கள். விஷயசொரூப வெளிப்பிரபஞ்ச சிற்றின்ப சுகபோகங்களின்பின் பாயும் மனமுடைய சிறு குழந்தைக ளுக்கொப்பானவர்கள் என்னுல் எரியப்பட்ட வலையில் அகப் பட்டு, இறப்பதும் பிறப்பதும், பிறப்பதும் இறப்பதுமாக ஜனன மரண சம்சாரச் சக்கரத்தில் சுழன்று கொண்டிருக்கி ருர்கள். மரணத்தின் இரகசியத்தை அறிந்து சாகிறவனில் சாகாமலிருக்கப்பட்ட தானை ஆத்ம ரூபத்தை தரிசித்த ஞா னிகள் நிலையில்லாத வஸ்துக்களில் ஏதேனும் நிலையுள்ள தாகக் காணப்படினும் அதன் பின் தம்மனதைச் செல்லவிடார்கள்.

ஓ நசிகேது! எதின் உதவியால் நாம் உருவங்களைப் பார்க்கிருேமோ, எதினுதவியால் நாம் பதார்த்தங்களின்

சுவையை அறிகிறோமோ, எதினுதவியால் நாம் வாசனைகளை முகர்கிறோமோ, எதினுதவியால் நாம் சப்தங்களைக் கேட்கிறோமோ, எதினுதவியால் நமக்கிஷ்டமுள்ள பொருள்களைத் தொடுவதால்வரும் சுகத்தை நாம் அனுபவிக்கிறோமோ, அதைக் கொண்டேதான் இவைகளுக் கப்பாற்பட்ட பிரம் பொருளையும் நாம் பார்க்கிறோம். நீ என்னைக் கேட்டதும் அதைப் பற்றியே.

நாம் தூங்கும்போது எதனால் சொப்பனப் பொருள்களை அறிந்தனுபவிக்கிறோமோ, நாம் எதினால் விழித்திருக்கும்போது உலக வஸ்துக்களை அறிந்தனுபவிக்கிறோமோ அது, தானான எங்குமிருக்கிற பரிபூரண ஆத்மசொரூபமென்றறிந்த அறிவாளி துக்கத்தினின்று விடுபடுகிறான்.

கடந்துபோனவை கட்கும் இனிமேல் நிகழ்வனவற்றிற்கும் கர்த்தன் தான் என்றும், தானே எப்போதும் பிழைத்திருக்கும் ஆத்மாவென்றும் தன்னை எவன் அறிகிறானோ, அவன் எல்லாவித பயத்தினின்றும் விடுபட்டவன். ஓ நசிகேதா! நீ யாரைப் பற்றி என்னைக் கேட்டாயோ அவர்தான் இவர்.

சிருஷ்டிக்குமுன் எவர் இருந்தாரோ, சிருஷ்டிக்கப்பட்ட உயிர்களின் உள்ளங்களில் பிரவேசித்து வாசஞ் செய்கிறவர் எவரோ, அவர்தான் பூதங்களைத் தள்ளிப் பார்க்கப்பட்டவர். அவர்தான் நீ. எல்லா தேவதாமூர்த்தங்களாயிருக்கப்பட்டவர்யாரோ, அவர் பிராணனோடு சேர்ந்து எல்லா உயிர்களின் உள்ளங்களில் பிரவேசித்து அவ்விடங்களில் குடியிருப்பதுமன்றி, பஞ்சபூதங்களாலாக்கப்பட்ட தேகங்களில் க்ஷேத்திரப் பிரவேசமும் செய்கிறார்.

தாயின் வயிற்றில் குழந்தை காப்பாற்றப்பட்டிருப்பதைப்போல, விரகுகளில் நெருப்பு மறைபட்டிருக்கின்றது. கொளுத்தப்பட்ட விரகுகளின் வெளிச்சம் எல்லாப் பக்கங்

களிலும் பரவுகின்றது. தானதுவாகிப் பிரகாசிக்கும் ஞானியைத் தேடி நைவேத்தியங்களைக் கொண்டுவருகிறவர்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கிறார்கள்.

எவ்விடத்திலிருந்து சூரியன் வெளிப்பட்டானோ, எவ்விடத்திற்குப் போய் சூரியன் மறைகிறானோ, அவ்விடத்தில் எல்லா தேவர்களும் இருக்கிறார்கள். அதற்குமேல் எவருக்கும் போக இடமில்லை.

இவ்விடத்தில் நாம ரூபங்களாகக் காணப்படுவது எதுவோ, அதுவே அவ்விடத்தில் நாமரூபமற்ற பிரம்ம சொரூபமாகப் பிரகாசிப்பது. அவ்விடத்தில் நாமரூபமற்ற அகண்ட பரமாத்ம சொரூபமாகப் பிரகாசிப்பது எதுவோ, அதுதான் இவ்விடத்தில் நாமரூப ஜீவேசுவர ஜெகத்தாகக் காணப்படுவது. எவன் நாமரூபப் பிரபஞ்சத்தைப் பிரம்மாகாரமாக மாற்ற வல்லவனோ, அவன் ஜனன மரணங்களினின்று விடுபட்ட முக்தன்.

மனதாலும் பிரம்மத்தை அடைய முடியும். மனம் பிரம்மாகாரமாக மாற்றப்பட்டபோது நாமரூபமயமாயிருக்கப்பட்ட பிரபஞ்சம் ஆத்மாகாரமாக மாறி விடுகிறது. இவ்விடத்தில் நாமரூபப் பிரபஞ்சத்தைப் பிரம்மாகாரமாக மாற்றிப்பாராதவன், இவ்வுலகில் மறுபடியும் மறுபடியும் பிறப்பதும், மறுபடியும் மறுபடியும் இறப்பதுமாயிருக்கிறான்.

அவர் புகையில்லா அகண்டப் பிரகாசர். சென்றவைகட்கும், இனிமேல் வரப்போகிறவைகட்கும் கர்த்தா அவர். இன்றைக்கிருக்கிறது போலவே நாளைக்கு மிருக்கப்பட்டவர்.

பிரம்மத்தை நாம ரூபப் பிரஞ்சங்களாகப்பார்த்து, அன்னுமரூப உலகவஸ்துக்களின் பிறகே ஓடுகிறவன் மலையின் மேல் வீழ்ந்து நாலாப் பக்கங்களிலும் வழிந்தோடும் மழைத் தண்ணீருக்கொப்பானவன்.

சுத்த ஜலத்தில் வார்க்கப்பட்ட சுத்த ஜலம் ஒரே சுத்த ஜலமாக இருக்கிறது போல, தன் ஆத்ம சொரூபத்தைப் பார்த்து ஆத்மபரமாத்ம ஐக்கியம் செய்து கொண்ட பிரம்ம ஞானியினிடம் ஆத்ம பரமாத்மபேதம் போய் தானே அத்வைத அகண்ட பரமாத்ம சொரூபனென அறிந்து, பேரானந் தானுபவ முக்தனுகிறுன்.

இந்த முக்தனின் தேகமென்னும் தேவாலயத்திற்கு பதினெரு வாசல்கள் இருக்கின்றன. இம்முக்தனுடைய எண்ணங்கள் எவருக்கும் கெடுதலில்லாதவை. தேவாலய மென்று சொல்லப்படாநின்ற இம்முக்தனின் தேகத்தினிடம் செல்கிறவர்கள் அறியாமையினின்றும் எல்லா துக்கங் களினின்றும் விடுபட்டு முக்தராகிறுர்கள்.,

பிராணனைக் கொடுக்கிறவரும், கொடுத்தபடி பிராணனை இழுத்துக் கொள்ளுகிறவரும் அவரே. ஞானகாயத்தின் மத்தியஸ்தானத்தில் வீற்றிருக்கும் அவரை தேவர்களெல்லாம் வணங்குகிறுர்கள். மற்றெல்லாராலும் துதிக்கப்படுகிறவரும் அவரே.

தேவாலய மென்னும் தேகத்தை இருப்பிடமா யுள்ள பிரம்ம ஞானியாகிய ஜீவன்முக்தன் தேகத்தை விட்டு, விதேகனுகும்போது நிற்பது எது உண்டோ, அது தான் அது. இந்த ஆத்மபரமாத்ம சொரூபத்தைப்பற்றி தான், ஓ நசிகேது! நீ என்னைக் கேட்டது.

உள்ளுக்கும் வெளிக்கும் போவதும், வருவதுமாயுள்ள பிராணனுல் தான் மனிதன் பிழைத்திருக்கிறுன் என்று நீ நினைக்கவேண்டாம். இப்பிராணன் எவரிடம் சென்று தூங்கி இளைப்பாற்றிக் கொள்ளுகிறதோ, அவரால்தான் நாமெல் லாம் உயிர்பெற்றிருக்கிறேம்.

மரணத்தின் துவாரா என் கைக்ககப்படுகிறவர்கள் என்னகதியை அடைகிறுர்கள் என்பதை நசிகேதா! நான்

உனக்கு இப்போது சொல்லுகிறேன். மனிதர்கள் தம் தம் இச்சைகளை திருப்தி செய்துகொள்ளுவதற் கனுகூலமான தேகங்களைக் கட்டிக்கொள்ளும் நிமித்தம் கருக்குழிகளில் தள்ளப்படுகிறார்கள். ஒவ்வோர் உயிரும் அதனதன் விருப்பத்திற்கேற்ற அனுபவங்களை அனுபவித்தற் கனுகூலமான தேகங்களைக் கட்டிக்கொள்ள கற்பப்பிரவேசம் செய்கிறது. ஒவ்வோர் ஜீவனும் அதனதன் அறிவின் அளவிற்கேற்ற சரீரங்களைக் கட்டிக்கொள்ள தாவரங்களிலேனும், ஜங்கமங்களிலேனும் பிறப்பிடத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறது.

நாம் தூங்கும்போது எந்த உத்தம புருஷர் தூங்காமலிருந்துகொண்டு இன்பகரமானவும், விநோதகரமானவுமான காட்சிகளுக்குப் பிறகுக் காட்சிகளைக் கற்பித்துக் கொண்டிருக்கிறாரோ, உண்மையில் அவரே நாசரகிதரான பிரகாச சொரூபப் பிரம்மமென வேதங்களில் புகழப்படுகிறவர். ஓ நசிகேதா! நீ என்னைக் கேட்டது அவரைப் பற்றியே.

நெருப்பானது ஒன்றே. இவ்வுலகில் வியாபித்துள்ள ஒரே நெருப்பானது எரியும் பதார்த்தங்களை முன்னிட்டு பல பெயர்களால் சொல்லப்படுவது போலவும், வெவ்வேறாகக் காணப்படுவது போலவும் எல்லாப் பொருள்களிலும் இருக்கப்பட்டவர் ஒருவரேயாயினும், வேறுவேறான பொருள்களில் பிரவேசித்திருக்கிற காரணத்தால், பல ஆன்மாக்களாகக் கருதப்படுகிறார். ஒவ்வோர் உடலில் பிரவேசித்திருக்கிற அவர் வெளியிலெங்கும் வியாபகராயிருக்கிறார்.

நமக்குக் காணப்படுகிற அசுத்தங்கள் நமது பார்வைக்குக் காரணமாயிருக்கப்பட்ட சூரியனைக் கறைப்படுத்துகிறதில்லை. நம்மை ஹிம்சிக்கும் இவ்வுலக துன்பங்கள் நம்முடைய ஆத்மாக்களுக்குத் தாயும் தந்தையுமா யிருக்கப்பட்ட பரமாத்மாவைத் தொடுகிறதில்லை.

ஒரே கடவுள், ஒருருவைக் கோடானுகோடி உருவங்களாக்கி, ஒவ்வோர் உடலின் உள்ளங்களில் ஒவ்வோர் ஜீவாத்மாவாகக் குடியிருக்கிறுர். தன் ஆத்ம ரூபத்தின் மூலமாக அப்பரமாத்மாவைத் தரிசித்த ஞானி எவரோ, அவருக்குத்தான் பேரானந்தம் சொந்தமானது. ஓ நசிகேதா! மற்றவர்களுக்கல்ல. மற்றவர்களுக்கல்ல.

மனதற்ற மனமுடைய மகா புருஷர் ஒருவரேயாயினும், ஒவ்வொருவர் நினைக்கிற நினைப்பின்படி அனுக்கிரகம் செய்யும் நிமித்தம் நினைப்புடையவராயிருக்கிறுர். இப் பரிபூரண ஒப்பற்ற அறிவாளியாகிய கடவுளைத் தன் ஆத்ம ஞானக்கண்ணுல் காண்கிறவனெவனே, அவனுக்குத்தான் சாசுவத சாந்தானந்தம் சொந்தமானது. ஓ நசிகேது! மற்றவர்களுக்கல்ல. மற்றவர்களுக்கல்ல.

மனதால் நினைத்து, வாக்கால் விவரித்துச் சொல்ல முடியாத பேரானந்த பரம்பொருளைப் பார்த்து, அனுபவிக்கும் பரம புருஷர்கள் அவர் இருக்கிறுர் என்று சொல்லி பரவசராய் விடுகிறுர்கள். அவர் சுயம்பிரகாசர். வேறென்றின் பிரகாசத்தால் பிரகாசிப்பவரல்லர். அவர்முன் நெருப்பும், மின்னலும், நக்ஷத்திரங்களும், சூரியனும் சூரியன்முன் சந்திரனைப்போலாய்விடுகின்றன. அவரருளால் பிரகாசப் பொருள்களெல்லாம் பிரகாசிக்கின்றன. ஓ, நசிகேது! அவர் நீ.

ஓ நசிகேது! உண்மையாகவே அவர் பரஞ்சோதி. அவர்தான் பிரம்மம். அவர் எப்போதும் இருக்கப்பட்டவர். நாசமில்லாதவர். மாறுதலற்றவர். பரிபூரணர். எங்குமுள்ளவர். ஸர்வவியாபி. சர்வ வல்லமையுள்ள கடவுள். அவரில்தான் எல்லா உலகங்களும் இருக்கின்றன. அவரை அடைந்தவன் அவருக்கப்பால் போக இடமில்லை. அவர் நீ.

ஓ நசிகேதா? அவரைத் தவிர்த்த மற்றவை அனைத்தும் அவருடைய பயத்தால் சலிக்கின்றன. 'ராஜதண்டனைக்குப் பயந்து சேவகர்கள் தம் தம் அலுவல்களைச் சரிவர செய்வதுபோல பூதக்கூட்டங்கள் அனைத்தும் கடவுளுடைய பயத்தால் தம் தம் கருமங்களைச் செய்கின்றன. அவரை அறிகிறவர்கள் சாதலினின்று விடுபட்டு, சாதலும் பிறத்தலு மற்ற நித்தியராகின்றனர். பிரம்மத்திற்குப் பயந்து நெருப் பெரிகிறது. பிரம்மத்திற்கு பயந்து சூரியன் பிரகாசிக்கிறான். இந்திரனும், வாயுவும், எமனும் அவருக்குப் பயந்து தம் தம் தொழில்களைச் செய்கின்றனர். ஓ நசிகேது! தேகத்தைத் தரித்துள்ள மனிதன் தேகவியோகமடையுமுன் இப் பிரம்மத்தை அறிந்துகொள்ளாவிட்டால், சிருஷ்டிக்குட் பட்ட உலகங்களில் மற்றோர் தேகத்தை எடுத்துக்கொள்ள வேண்டியவனே.

ஓ நசிகேது! நாம் நம்மடைய முகத்தைக் கண்ணாடியில் பார்ப்பதுபோல நாம் நம்முடைய இந்த தேகத்தில் பிரம்மத்தைப் பார்க்கிறோம்.

ஆத்மாவைக்காட்டிலும் இந்திரியங்கள் வேறானவை என்றும், அவைகள் மூலப் பிரக்ருதியிலிருந்து பிறந்து அழியக்கூடியவை என்றும் அறிந்துள்ள ஞானவான் எதற்கும் கவலைப்படுகிறதில்லை.

இந்திரியங்களுக்கப்பால் மனதிருக்கிறது. மனதிற்கப்பால் புத்தி யிருக்கிறது. புத்திக்கப்பால் ஜீவாத்மா இருக்கிறது. இதற்கப்பால் மூலப்பிரக்ருதி. மூலப்பிரக்ருதிக்கப்பால் சர்வ வியாபக பரமாத்மன் இருக்கிறார். எவனொருவன் அவரை தரிசிக்கிறானோ, அவன் விடுதலைப்படுகிறான். அவரைப் பார்த்தவனெவனோ, அவன் மோக்ஷமடைந்தவன். அவரைப் பார்க்கிறவனெவனோ அவனே பேரானந்தானுபவ

ஜீவன்முக்தன். அவர் நம்முடைய இத்தேகக்கண்களால் பார்க்கமுடியாதவராயிருக்கிறபடியால், பார்க்க முடியாதவரென்று சொல்லப்படுகிருர். நாம் அவரை மனதால் பாவித்து நம்முடைய ஞானக் கண்ணுல் அவரை தரிசித்து நித்தியாநந்த மோக்ஷ நிலையை அடைந்து சாதல் பிறத்தல்களினின்று விடுபடுகிறேம்.

ஓ நசிகேதா! எப்போது ஞானேந்திரியங்கள் ஐந்தும் மனதிலடக்கமாகி, மனமும் புத்தியும் சலன மற்றிருக்குமோ அப்போது மனிதன் உத்தம நிலையை அடைந்தவனெனப் படுகிருன். இந்திரியங்களைச் சுவாதீனப் படுத்தும் செயலை யோகமென்பர். மனிதன் தன் முயற்சியை இந்திரிய சுவாதீனத்தோடு நிறுத்திவிடக் கூடாது. ஏனென்றுல், இதிலவன் நழுவக் கூடிய அபாயம் இருக்கின்றது.

ஆத்மா கண்களால் பார்க்கக்கூடியதல்ல. அது வாக்காலும், மனதாலும் கூட எட்ட முடியாதது. அதைப் பார்த்தவன் அது இருக்கிறதென்று சொல்வதைக் கேட்டு தெரிந்து கொள்வதைக் காட்டிலும் வேறெவ் விதமாக அதை அறிய முடியும்?

அவர் இருக்கிருர் என்று சொல்லப்பட்ட சொற்களைக் கொண்டும், காணப்படும் இவ்வுலகங்களுச் செல்லம் காரண கர்த்தர் இருக்கத்தான் வேண்டு மென்கிற அறிவைக் கொண்டும் அறிகிறவனுக்கு அவர் காணப்படாமலிருக்கிறதில்லை.

மனதிலுள்ள ஆசைகளெல்லாம் அறவே ஒழிந்தபோது சாவுக்குரியவன் சாகா நிலையை அடைகிருன். ஹிருதயக் கிரந்திகளெல்லாம் அறுபட்டபோது சாவுக்குரிய அனித்தியன் சகாநித்தியனுகிருன்.

ஓ நசிகேது! நூற்றெரு நாடிகள் ஹிருதயத்தில் உற்பத்தியாகி தேகத்திலோடுகின்றன. ஹிருதயத்திலிருந்து

உச்சிக்குப் போகும் நாடியில் செல்லக் கற்றவன் மரண காலத்தில் பரமாத்மாவில் கலக்கிறான். மற்றைய நரம்புகள் அவரவர்களிச்சைக்கேற்றபடி வெளிப்பட்டுப் போகும் வழிகளாக உபயோகப்படுகின்றன.

ஓ நசிகேது! பெருவிரலளவாயுள்ள ஜீவாத்மா எப்போதும் ஹிருதயத்தில் வீற்றிருக்கிறார். புல்லிலிருந்து தக்கையை உரித்தெடுப்பதைப் போல வெகு ஜாக்கிரதையாக ஒருவன் இந்த ஜீவாத்மாவை தேக சம்பந்தத்திலிருந்து பிரித்து, நாசரகிதப் பிரகாச சொரூப பரமாத்மனைப் பார்க்க வேண்டும். உண்மையில் அவர் பிரகாச சொரூப நாசரகிதராகவே யிருக்கிறார்.

ஹிருதய குகையில் பிரவேசித்திருக்கிறவரும், அஞ்ஞான இருளால் மறைபட்டிருக்கிறவரும், தூரத்திலிருக்கிறவர்களால் கடவுளென பூஜிக்கப்படுகிறவருமான இப்புராண புருஷரை தியானயோகத்தால் அறிவாளிகள் கண்டு, சுக துக்க ரூபமான ஜனன மரணங்களினின்று விடுபட்டு முக்தராகின்றனர்.

எவன் ஆத்ம சொரூபத்தை தரிசித்த ஆத்மஞானிக்கு அடைக்கலமாகி, அம்மகானை பக்தி சிரத்தையோடு உபசரித்து, போற்றி, ஆத்மாவைப் பற்றி கேட்டு, கேட்டபடி அதைக் காண காதல்பட்டுத் தன் உள்ளத்துள்ள உலக வாசனைகளை அப்புறப் படுத்துவானோ, அவன் சூக்ஷ்மத்திலும் அதிசூக்ஷ்மமான அப்பரம்பொருளை தரிசித்து, பேரானந்தானுபவ ஜீவன்முக்தனாகிறான். ஓ நசிகேது! உண்மையில் அவர் பேரானந்த பரிபூரண ஞானசொரூபரே.

நம்மிருவருக்கும் நடந்த இந்த ஆத்ம பரமாத்ம சம்வாத ஞானத்தை ஓ நசிகேது! எவன் படித்து, இதில் கூறியுள்ளபடி யோகாப்பியாசம் செய்கிறானோ, அவன் உன்னைப்

போலவே பிரம்ம சொரூபத்தை தரிசித்து சர்வ பந்தங்களி னின்று விடுபட்ட முக்தனுகிருன்.

ஓ நசிகேது! நம்மிருவர்களுடைய ஆத்மாக்களுக்கு சாக்ஷிரூபனுக நின்று, நம்மை நடத்தும் பரமாத்ம சொரூபர், நம்மிருவர்களையும் காப்பாராக. அவர் நம்மிருவர்களையும் அனுபவிப்பாராக. நம்மிருவர்களுக்கும் அபிப்பிராய பேதங் கள் எக்காலத்தும் நேராதிருக்க அவர் அனுக்கிரகம் செய்வா ராக. நம்முடைய இந்த ஆத்ம பரமாத்ம ஞான நிலையை நாம் காப்பாற்றிக்கொள்ளத்தக்க வலிவையும் தைரியத்தையும் அவர் நமக்களிப்பாராக. நம்முடைய இந்த ஆத்மபரமாத்ம ஞானம் எப்போதும் எவ்விடத்தும் பிரகாசிக்குமாறு கிருபை பாலிப்பாராக.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஹரி ஓம்.

---

## யாஞ்ஞவல்கியருக்கும் ஜனக சக்கரவர்த்திக்கும் நடந்த சம்பாஷணை.

---

ஜனகர் இல்லற ஞானியென எல்லா ஞானநூல்களிலும் சிறப்பித்துப் பேசப்பட்டுள்ளர். இவருக்கு உலக வஸ்துக்களிடமிருந்த பற்றற்ற மனநிலை அதாவது உதாசீன புத்தியும், தியாக குண நடத்தைகளும் நாளது வரையில் இவரை இல்லற ஞானிகளில் உத்தமரென மதிக்கச் செய்தன. இவர் இல்லற ஞானிகளான ஸ்ரீ கிருஷ்ணருக்கும், ஸ்ரீ ராமருக்கும் முன்னேருக இருத்தல் வேண்டும்.

இவரது காலத்தில் அதிகப் பிரசித்தராக இருந்த பிரம்மஞானி யாஞ்ஞவல்கியர். இவர் ஆத்ம பரமாத்ம தரிசனம் பெற்று ஆத்மப்பிரக்ஞையில் நிலைத்த ஓர் உத்தம பிராம்மணர். ஜனகர் யாகமொன்றைச் செய்தபோது பொன்னுபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட கொம்புகளையுடைய ஆயிரம் பசுக்களைப் பிராமணர்களுக்கு தானமாகக் கொடுக்க யாகசாலையில் அவர் கொண்டு வந்து நிறுத்தினர். யாகம் முடிந்ததும் யாகசாலைக்கு வந்திருந்த பிராம்மணர்களைப் பார்த்து உங்களில் யார் யார் இப் பசுக்களை ஓட்டிக்கொண்டு போவதற்கான யோக்கியத்தை யுள்ளவர்களென்று நினைக்கிறீர்களோ அவர்களெல்லாம் எழுந்து வந்து இப் பசுக்களை ஓட்டிக்கொண்டு போகலாம் என்று ஜனகர் சொன்னர். பிராம்மணர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு அசையாமல் இருந்த இடத்திலேயே இருந்தார்களே ஒழிய யாஞ்ஞவல்கியர் ஒருவர் தவிர மற்றெவரும் எழுந்தாரில்லை.

யாஞ்ஞவல்கியர் தன் சிஷ்யர்களைக் கூப்பிட்டு இப்பசுக்களை எல்லாம் ஓட்டிக்கொண்டு போய் என் இல்லத்தில் விட்டு வாருங்கள் என்று கட்டளையிட்டார். மற்றைய பிராம்மணர்கள் எழுந்து யாஞ்ஞவல்கியரைப் பார்த்து எங்களுக்கில்லாத யோக்கியதை உமக்கு மாத்திரம் என்ன இருக்கிறது? நீர் எப்படி இப்பசுக்களை ஓட்டிக்கொண்டு போகலாம்? என்று கேட்டார்கள். ஜனகர் முன்னிலையில் இப்பிராம்மணர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வேதசம்மதமான பதில் யாஞ்ஞவல்கியர் கொடுத்ததின் பேரில் எதிர்ப்பாரின்றி யாஞ்ஞவல்கியருடைய சிஷர்கள் பசுக்களை எல்லாம் ஓட்டிக்கொண்டு போய் விட்டார்கள்.

இக்காலத்தில் யாஞ்ஞவல்கியரைப் பிராம்மணர்கள் கேட்ட கேள்விகளும், யாஞ்ஞவல்கியரருளிய பதிலுத்தரங்களும், பிற்காலத்தில் ஜனகருக்கும் யாஞ்ஞவல்கியருக்கும் நடந்த சம்பாஷணைகளில் சிலதும் பிரகதாரண்யக உபநிடதத்தில் இருக்கின்றன. கீழ் சொல்லப்பட்டிருப்பது ஜனகருக்கும், யாஞ்ஞவல்கியருக்கும் நடந்த சம்பாஷணை ஒன்றின் மொழிபெயர்ப்பு :—

ஜனகர்:—ஓ யாஞ்ஞவல்கியரே! மனிதன் சூரிய வெளிச்சத்தினுதவியால் பகலில் அங்குமிங்கும் போய் உலாவி வேலை செய்து திரும்புகிறான். சூரியன் அஸ்தமித்த இரவில் மனிதன் சந்திர வெளிச்சத்தினுதவியால் அங்குமிங்கும் போய் வேலை செய்து வீட்டிற்கு வருகிறான். சூரியனும், சந்திரனும் இல்லாத இரவில் மனிதன் நெருப்பின் உதவியால் நினைத்த இடங்களுக்கெல்லாம் போய் தன் அலுவல்களைச் செய்து திரும்புகிறான். சூரியாஸ்தமனமான பிறகு சந்திரனும் உதயமாகவில்லை. நெருப்பும் கிடைக்கவில்லை. இக்காலத்தில் மனிதனுக்கு உதவும் வெளிச்சம் யாது?

யாஞ்ஞவல்கியர் :—ஓ ஜனகரே! சூரியனும் சந்திரனும் நெருப்பும் இல்லாத காலத்தில் ஓசை வெளிச்சத்திற்குப் பதிலாக உபயோகமாகிறது. ஓசையால் மனிதன் உட்காருகிறான். நடக்கிறான். அங்குமிங்கும் அலைந்து வேலைசெய்து திரும்புகிறான். தன் கை தனக்குத் தெரியாத இருளிலும் ஓசை கேட்ட இடத்திற்குப் போகிறான். வருகிறான்.

ஜனகர் :—ஓ யாஞ்ஞவல்கியரே! ஆம், நீர் சொல்லுவது சரிதான். சூரியனும் மறைந்தான். சந்திரனும் வரவில்லை. நெருப்பும் கிடைக்கவில்லை. ஓசையும் அடங்கிவிட்டது. அக்காலத்தில் மனிதனுக்கு உதவும் பிரகாசம் யாது?

யாஞ்ஞவல்கியர் :—ஓ ஜனகரே! தானே தனக்குப் பிரகாசம். தன் ஆத்மாவையே தனக்கு உதவியாக வைத்துக்கொண்டு மனிதன் உட்காருகிறான். நடக்கிறான். நினைத்த இடங்களுக்குப் போய் திரும்புகிறான்.

ஜனகர் :—ஓ யாஞ்ஞவல்கியரே! அந்தத் தன் ஆத்மசொரூபம் எப்பேற்பட்டது?

யாஞ்ஞவல்கியர் :—ஓ ஜனகரே! பிரகச சொரூபரும் அறிவுருவானவரும், இந்திரியங்களால் சூழப்பட்டு ஹிருதயஸ்தானத்தில் வீற்றிருக்கிறவரும் எவரோ அவர் ஆத்மா. அவர் இகத்திற்கும், பரத்திற்கும் போக்குவரத்துமாயிருப்பவர். தூக்கத்தின் போதும், மரணத்தின் போதும் அழியக்கூடிய உருவங்களை உடைத்தாயுள்ள இவ்வுலகத்தைக் கடக்கிறார். அவருக்கு இவ்வுலகத்திய நிலை ஒன்று, மறு உலகத்திய நிலை ஒன்று, இவ்விரு உலகங்களுக்கும் மத்திய நிலை ஒன்று. இம்மூன்று நிலைகளை அவர் மாறி மாறி அடைகிறார். இகலோக பரலோக நிலைகளுக்கு மத்திய நிலையாகிய தூக்கத்தில் ஆத்மா சுயம் பிரகாசரா யிருக்கிறாராலும், இகலோக சுகதுக்க அனுபவங்கள் வாசனைகளாக மனதில் படிந்திருக்கும் காரணத்தால் இகலோகத்தைப்போன்ற உலகங்களை

சிருஷ்டி செய்து தன் பிரகாசத்தால் பார்த்து அவைகளை அனுபவிக்கிறார்.

இம் மத்திய நிலையில் குதிரைகளில்லை. ரதங்களில்லை. பாதைகளில்லை. அவரே குதிரைகளையும் ரதங்களையும் பாதைகளையும் உண்டாக்கிக் கொள்ளுகிறார். இந்த மத்திய நிலையில் குளங்களில்லை. ஏரிகளில்லை. ஆறுகளில்லை. அவரே குளங்களையும் ஏரிகளையும் ஆறுகளையும் சிருஷ்டித்துக்கொள்கிறார். உண்மையில் அவரே கிருஷ்டிகர்த்தர். தேக சம்பந்தமானவை அனைத்தையும் தூக்கம் சுவாதீனப் படுத்திக்கொண்டாலும் தான் தூங்காமல், தூங்கும் இந்திரியங்களை சாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் சுயம்பிரகாச தங்கநிற தனி சுயம்பு அவர். அவர் தன்னிலையில்தான் தானாகவே யிருக்கிறார்.

தங்க நிறமானவரும், தனித்த பரம ஹம்ஸரும், சுயம்புவும், நாசரகிதருமான அவர் தன் கூடாகிய தேகத்தைப் பிராணனின் பாதுகாப்பின்கீழ் விட்டு தன்னிஷ்டப்படி தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட உலகங்களில் சஞ்சாரம் செய்கிறார். அவர் தனக்காக பல உருவங்களை எடுத்துக்கொண்டு ஸ்திரீகளோடு கிரீடை செய்வதும், சிநேகிதர்களோடு சிரிப்பதும் விளையாடுவதும், இன்பகரமான காக்ஷிகளையும் பயங்கரமான தோற்றங்களையும் பார்ப்பதுமாக இருக்கிறார். மற்றவர்கள் அவரது விளையாட்டிடமாகிய தூங்கும் தேகத்தைப் பார்க்கிறார்களே ஒழிய அவரைப் பார்க்கிறதில்லை. தூங்குகிறவனை திடீரென எழுப்பலாகாது. ஆத்மா உடனே தேகத்திற்குட் திரும்பாவிட்டால் தேகத்திற்கு அழிவு உண்டாகிவிடும்.

இவ்வுலகக்காட்சிகளுக்கும், சொப்பனக்காட்சிகளுக்கும் பேதம் காணப்படாத காரணத்தால் சிலர் ஆத்மாவின் சொப்பன நிலையையும், இவ்வுலக நிலையையும் ஒன்றென்பர். ஆத்மாவின் சொப்பன நிலை வேறானதே. ஏனென்றால் ஆத்மா

தான் சிருஷ்டித்தவைகளைத் தன் பிரகாசத்தாலேயே பிரகாசிக்கச் செய்கிறார்.

ஜனகர் :—ஓ யாஞ்ஞவல்கியரே! தாங்கள் சொல்லுவதெல்லாம் சரியே. அவை அனுபவத்திற்குச் சம்மதமாயிருக்கின்றன. இந்த ஆயிரம் பொன்னை குருதக்ஷிணையாக அங்கீகாரம் செய்துகொண்டு அடியேன் கடத்தேறும் பொருட்டு ஆத்மாவைப்பற்றி மேலும் மேலும் சொல்லப் பிரார்த்திக்கிறேன்.

யாஞ்ஞவல்கியர் :—ஓ ஜனகரே! சொப்பனத்தைக் கடந்த சுழுத்தி அல்லது சமாதி நிலையில் ஆத்மா சுயம் பிரகாச ஆனந்தானுபவியாக இருந்து, சுகதுக்கக்கலப்பான சொப்பன உலகத்தின் மூலமாக இவ்வுலகத்தில் விழித்தெழுகிறார். அவர் மேற்சொல்லப்பட்ட இரு நிலைகளில் பார்த்தவைகளைத் தன்னோடு கொண்டு வருகிறதில்லை. ஏனென்றால், அவர் அவ்விரு நிலைகளிலும் பற்றற்ற அனுபவியாக இருக்கிறார்.

ஜனகர்:—ஓ யாஞ்ஞவல்கியரே! ஆம். தாங்கள் சொல்வதெல்லாம் உண்மையே. இவ்வாயிரம் பொன்னையும் பெற்றுக்கொண்டு என் திருப்தியின் பொருட்டு தாங்கள் சொன்னதை மறுபடியும் சொல்வீராக.

யாஞ்ஞவல்கியர்:—ஓ ஜனகரே! சுழுத்திநிலையில் அவர் தன் சுயாத்மானந்தத்தை அனுபவித்துவிட்டு, சொப்பன உலகத்தில் தன்னிஷ்டம் போல திரிந்து, பிரியமானவும் பயங்கரமானவுமான உருவங்களைப் பார்த்து, தான் எங்கிருந்து புறப்பட்டாரோ அவ்விடமாகிய இவ்வுலகத்திற்குத் துரிதமாகத் திரும்பி தன் தேகத்தில் விழித்தெழுகிறார். அவ்விரு உலகத்தியவைகள் இவர்பின் தொடருகிறதில்லை. ஏனென்றால், பற்றின்றி அவ்விரு உலகங்களை இவர் அனுபவிக்கிறார்.

ஜனகர்:—ஓ யாஞ்ஞவல்கியரே! ஆம் தாங்கள் சொல்வதெல்லாம் வாஸ்தவமானதே. இதோ இந்த ஆயிரம் பொன்

னையும் பெற்றுக்கொண்டு என் ஆத்ம லாபத்தின் நிமித்தம் தாங்கள் சொல்லப் பிரியப்படுவதை எல்லாம் சொல்லுங்கள்.

யாஞ்ஞவல்கியர்:—ஓ ஜனகரே! அவர் இவ்வுலகில் விழித்தெழுந்து அங்குமிங்கும் திரிந்து, நல்லதையும் கெட்டதையும் பார்த்து, சுகதுக்கானுபவியாயிருந்து அவசரமாக சொப்பன உலகத்தின் மூலமாக தான் புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிப் போகிறார். ஓ ஜனகரே! ஓர் பெரிய மீன் ஆற்றின் இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையிலிருந்து இக்கரைக்கும் போவதும் திரும்புவது மாயிருப்பது போல, அவர் அவ்வுலகத்திலிருந்து இவ்வுலகத்திற்கும், இவ்வுலகத்திலிருந்து அவ்வுலகத்திற்கும் போவதும் வருவதுமாயிருக்கிறார். ஓ ஜனகரே! ஒரு ராஜாளி வானமெல்லாம் திரிந்து அலுத்து இரக்கைகளை அடக்கிக்கொண்டு தன் கூண்டிற்குள் அடங்குவதுபோல அவர் தன்னாத்ம நிலைக்கு அவசரமாகப் போகிறார். அவ்விடத்தில் அவர் ஒன்றையும் நினைக்கிறதில்லை. ஒருவித சொப்பனத்தையும் அவர் அவ்விடத்தில் காண்கிறதில்லை. ஓ ஜனகரே! இதுதான் அவருடைய சொந்த யதார்த்த நிலை. ஆசைகளில்லாதது. துன்பங்களில்லாதது, பயமில்லாதது. ஒருவன் தன் பிரிய நாயகியால் ஆலிங்கனம் செய்யப்பட்டபோது அவனுக்கு உள்ளிலும், வெளியிலும் ஒன்றும் தோன்றுகிறதில்லை. அதுபோல அவர் சுழுத்தி அல்லது சமாதி நிலையில் ஆத்மப்பிரக்ஞையிலமிழ்ந்திருக்கும் போது அவருக்கு ஆத்ம சொரூபம் ஒன்று தவிர மற்றெதுவும் காணப்படுகிறதில்லை. உண்மையில் இது தான் அவருடைய யதார்த்த உருவம், இதில் அவருடைய இஷ்டங்களெல்லாம் பூர்த்தியாகின்றன. இதில் ஆத்மப் பிரியம் ஒன்றுதான் அவருடைய இஷ்டம். ஆத்மப் பிரியத்தில் மற்றெவ்வித விருப்பமும் கிடையாது. துக்க மில்லாதது. வியசன மற்றது. ஓ ஜனகரே! அவ்விடத்தில் தகப்பன் தகப்ப

ளுகான். தாய் தாயாகாள். உலகங்கள் உலகங்களாகா. தேவர்கள் தேவர்களாகார். வேதங்கள் வேதங்களாகா. திருடன் திருடனுகான். கொலையாளி கொலையாளியாகான். சண்டாளன் சண்டாளனுகான். புலையன் புலையனுகான். ஸ்ரமணன் ஸ்ரமணனுகான். தவசி தவசியாகான். அவ்விடத்தில் நல்லதுமில்லை. கெட்டதுமில்லை. மனிதர்களை வசப்படுத்தி துன்புறச் செய்யும் அம்சங்கள் அவ்விடத்திலொன்றுமே இல்லை.

ஓ ஜனகரே! அவர் எதையும் பாராதவராயினும் பார்க்கிறவரே; ஏனென்றால் பார்வை பார்க்கிறவனைக் காட்டிலும் வேறானதல்ல. பார்வை அழிவில்லாதது. இரண்டாவது வஸ்து அவ்விடத்திலில்லாத காரணத்தால் அவர் தன்னையே தான் பார்க்கிறார்.

அவர் நினைக்கிறதில்லையாயினும் அவர் நினைக்கிறவரே. ஏனென்றால் நினைவு நினைக்கிறவனைவிட வேறாகாது. அது அழியாதது. அவ்விடத்தில் தன்னைக்காட்டிலும் அன்னியமானது ஒன்றுமில்லாத காரணத்தால் அவர் நினைப்பற்றவரென்று சொல்லப்படுகிறார்.

அவர் பேசுகிறதில்லையாயினும் அவர் பேசுகிறவரே. ஏனென்றால், பேச்சு பேசுகிறவனைக் காட்டிலும் வேறாகாதது. அது அழியாதது. அவ்விடத்தில் அவரைவிட வேறொன்றும், வேறொருவரும் இல்லாததால் அவர் யாரோடு எதைப் பற்றி பேசுவார்.

அவர் தொடுகிறதில்லை யாயினும் தொடுகிறவரே. உணர்வு அறிவாளியைக் காட்டிலும் வேறாகாது. உணர்ச்சி அழியாதது. தன்னைவிட அன்னியமானது ஒன்றுமில்லையாகையால் அவர் எதைத் தொடுவார்?

அவ்விடத்தில் அவர் ஒன்றையும் அறிகிறதில்லை என்று சொல்லலாம். ஆனாலும், அவர் அறிவுருவானவர். அறிவு

அறிவாளியைக் காட்டிலும் வேருகாது. அறிவு அழியாதது. தன்னினும் அன்னியமானது அவ்விடத்தில் எதுவும் இல்லாத தால் அவர் தன்னையே தான் அறிகிருர்.

இவ்வுலகத்திலும், சொப்பன உலகத்திலும் தன்னினும் அன்னியர் பலர் இருக்கிருர்கள். அவ்விடங்களில் ஒருவன் இன்ஞெருவனைப் பார்க்கிருன். முகருகிருன். ஒருவன் மற் ருெருவனேடு பேசுகிருன். ஒருவன் மற்ருெருவன் சொல் வதை செவிகொடுத்து கேட்கிருன். ஒருவன் மற்ருெருவ னைப் பற்றி நினைக்கிருன். ஒருவன் மற்ருெருவனைத் தொடு கிருன். ஒருவன் மற்ருெருவனை அறிகிருன்.

இரண்டாவதற்று தன்னைப்பார்கிற அவர் கடலைப் போல அகண்டமானவர். ஓ அரசே! இவரது இந்நிலையைத் தான் பிரம்மபத மென்பர். இதுதான் உத்தமமான முடிவு. இதுதான் எல்லாவற்றிலும் மேலான வெற்றி. இதுதான் உத்தம உலகம். இதுதான், அவருடைய ஆனந்தநிலை. மற் றெல்லா ஜீவஜந்துக்களும் இவ்வின்பத்தின் சிறிது சிறிதளை வைக்கொண்டு உயிர்பெற்று வளர்கின்றன.

தேகாரோக்கிய முள்ளவனுயும், தனவந்தனுயும், மற்றவர் களுக்கரசனுயும், சுகந்தரும் பொருள்களைத்தாலும் சூழப் பட்டவனுயு மிருக்கிறவனை இவ்வுலகில் ஈசுவரானுக்கிரகம் பெற்ற சுகபுருஷனென்பர். இம்மனுஷ்யானந்தத்தைப் போல் நூறுபங்கதிகமான சுகத்தைப் பிதுர்லோகத்தை ஜயித் தவன் அனுபவிக்கிருன். பிதுர்லோகத்தை அடைந்தவன் அனுபவிக்கும் சுகத்தைப்போல் நூறுபங் கதிகமான சுகத் தை கந்தர்வலோகத்தை அடைந்தவன் அனுபவிக்கிருன். கந்தர்வலோகத்தவன் அனுபவிக்கும் சுகத்தைக் காட்டிலும் நூறுபங் கதிகமான சுகத்தை யாகயக்ஞாதி நற்கருமங்களால் சுவர்க்கலோகத்தை அடைந்தவன் அனுபவிக்கிருன். இவ னுடைய சுகத்தைக் காட்டலும் நூறுபங்கதிகமான சுகத்தை

வேதாத்தியயனம் செய்யும் சுரோத்திரியர் அனுபவிக்கிறார்கள். சுரோத்திரியர் சுகத்தைக்காட்டிலும் நூறுபங்கதிகமான சுகத்தைப் பிரஜாபதியை அடைந்தவர்கள் அனுபவிக்கிறார்கள். பிரஜாபதியின் சுகத்தைக் காட்டிலும் நூறுபங்கதிகமான சுகத்தை ஆத்ம சொரூபத்தை அடைந்த ஆத்மஞானி அனுபவிக்கிறான். இச்சுகத்தைப் பேரானந்தமென்றும், பிரம்மானந்தமென்றும் சொல்வர். இவ்வானந்தம் ஈசுவரானுக்கிரகம் பூரணப்பட்ட இன்பம். ஓ ஜனகா! இது தான் முக்திநிலை. மோக்ஷானந்தம் என்பதும் இதுவே.

ஜனகர்:—ஓ யாஞ்ஞவல்கியரே! இந்த ஆயிரம் பொன்னையும் பெற்றுக்கொண்டு நான் கரும பந்தத்தினின்று விடுபட்டு சுயாத்மானந்தத்தை அனுபவிக்கும் நிமித்தமாக எனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்வீராக.

யாஞ்ஞவல்கியர்:—ஓ ஜனகரே! அவர் சுழுத்தியில் சுயாத்மானந்தத்தை அனுபவித்துவிட்டு, மத்திய நிலையாகிய சொப்பனத்தில் இங்கு மங்கும் சஞ்சரித்து, நல்லதையும் கெட்டதையும் பார்த்து, எந்த இடத்திலிருந்து புறப்பட்டு போனாரோ அந்த இடத்திற்கே திரும்பி வந்து விழித்தெழுகிறார். ஓ ஜனக சக்கரவர்த்தியே! சுமை அதிகமாக ஏற்றப்பட்ட வண்டி கூச்சலிட்டுக்கொண்டு போவதுபோல தேகாபிமானமுள்ள ஜீவன் மரண காலத்தில் தேக, குடும்ப, உலக வாசனைகளாலாய வினை என்கிற சுமையைச் சுமப்பதால் பெருமூச்சு விட்டுக் கொண்டு தேகத்தை விட்டு வெளிப்படுகிறான். கிழத்தனத்தால் தேகம் தளர்ந்தோ, வியாதியால் தேகம் பலஹீனப்பட்டோ, புருஷன் தேக அவயவங்களிலிருந்து பிரிந்து பழுத்த பழம் காம்பைவிட்டு விலகுவதைப்போல தேகத்தை விட்டுப்போட்டு தான் வந்த இடத்திற்கே போய் கரும வாசனைகளால் இழுக்கப்பட்டு மறுபடியும் இவ்வுலகத்திற்குப் புதிய தேகத்தைக் கட்டிக்கொள்ளத் திரும்புகிறான்.

வேலையாட்களும், விசாரணைக்காரர்களும், நியாயாதிபதிகளும், ராஜப்பிரதிநிதிகளும் ராஜனைப் பின்தொடர்வதைப்போல பிராணனும், மனதும், இந்திரியங்களும் புருஷனோடு பின்தொடர்ந்து செல்கின்றன.

வேலையாட்களும், விசாரணைக்காரர்களும், நியாயாதிபதிகளும், ராஜப்பிரதிநிதிகளும் ராஜனுடைய வரவை அறிந்து அவரை எதிர்கொண்டழைப்பதைப்போல தேகத்தைவிட்டுப் போய் மறுதேகத்தைக் கட்டிக்கொள்ளத் திரும்பும் புருஷனிடம் பிராணனும், மனதும், இந்திரியங்களும் வந்து சேருகின்றன.

பலஹீனத்தால் புருஷன் உலகஞானமிழந்து ஹிருதயத்திற்குள்ளடங்கும்போது இந்திரியங்களும், பிராணன்களும் கூடவே அடங்குகின்றன. கண்களின் பார்வை உட்புறம் திரும்பிவிடுகின்றது. புருஷன் வெளிவுருவங்களைப் பார்க்கிறதில்லை. இப்போது புருஷன் ஒன்றோடொன்றாய் விடுகிறான். அதாவது அவன் தன்னிலே தானாய் தன்னையே தான் பார்க்கிறான்.

அவர் பர்க்கிறதில்லை. ஏனென்றால், அவர் ஒன்னோடு ஒன்றாய்விட்டார். அவர் வாசனை அறிகிறதில்லை. ஏனென்றால், அவர் தன்னோடு தானாய்விட்டார். அவர் ருசி அறியார். ஏனென்றால், அவர் ஆத்மாவோடு ஆத்மாவாய் விட்டார். அவர் பேசமாட்டார். ஏனென்றால், அவர் பரமாத்ம பிரக்ஞையில் மூழ்கிவிட்டார். அவருக்குக் காது கேட்கிறதில்லை. ஏனென்றால், அவர் பரமாத்மாவில் ஐக்கியப்பட்டிருக்கிறார். அவர் தொடுகிறதில்லை. ஏனென்றால், உணர்வுள்ள ஆன்ம சக்தி ஹிருதயத்தில் குவிந்து ஒன்றோடு ஒன்றாய்விட்டது. அவர் வெளியிலிருப்பவர்களெவரையும் அறிகிறதில்லை. ஏனென்றால், அறிவனைத்தும் ஹிருதயத்திலடங்கி ஒன்றோடொன்றாய்ப் பிரகாசிக்கிறது. ஹிருதயம்

பூரணமாகப் பிரகாசிக்கப்படுகிறது. பூரணப்பிரகாசத்தோடு புருஷன் கண்களின் மூலமாகவோ, கபாலத்தின்மூலமாகவோ அல்லது தேகத்தின் மற்றெவ்வழியாகவோ புறப்பட்டு போகிறார். அவர் இவ்வாறு புறப்பட்டு போகும்போது பிராணனும் அவரோடுகூடவே போகிறது. பிராணன் போகும்போது மனதும், இந்திரியங்களும் கூடவே செல்கின்றன. இவை அனைத்தையும் அவர் அறிகிறார். அறிந்து இவைகளைத் தன்னோடு கொண்டுபோகிறார் அல்லது அவைகள்பின் இவர் செல்கிறார்.

ஓ சக்கரவர்த்தியே! இலையின் நுனிக்குச் சென்ற புழு இலையிலிருந்தபடி முன்னங்கால்களால் மற்றோரிலையைப் பற்றிக்கொண்டு பின்னங்கால்களை எடுத்துக் கொள்வது போல மரணகாலத்தில் ஜீவான்மா மற்றோர் தேகத்தை நாடி தன் ஜன்மாந்திர அனுபவ ஞானத்துடன் சென்றடைகின்றது.

பொன்னைக் கொண்டு தட்டான் புதியதும், முந்தியதைக் காட்டிலும் அதிக அழகுள்ளதுமான நகையொன்றைச் செய்வதுபோல, தேகத்தை விட்ட ஜீவான்மா பிதுர்களுடைய தேகத்தைப் போலவாவது, கந்தர்வாளுடைய தேகத்தைப் போலவாவது, தேவர்களுடைய தேகத்தைப் போலவாவது, பிரஜாபதியின் தேகத்தைப் போலவாவது, மற்றெவ்விதமானதாகவாவது கட்டிக்கொள்கின்றது.

ஜன்மாந்திர உலகானுபவங்கள், மனம், பிராணன், பார்வை, கேள்வி, மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், வெளிச்சம், இருள், ஆசை, நிராசை, கோபம், கோபமின்மை, நீதி, அநீதி, மற்றெல்லாவற்றையுமே தன் பால் வைத்துள்ள ஜீவனும் உண்மையில் பிரம்மமே.

செயல்களால் ஒருவன் இத்தகையவன் அத்தகையவன் என்று சொல்லப்படுகிறான். நற்காரியங்களைச் செய்கிறவன் நல்லவனெனப்படுகிறான். கெட்ட காரியங்களைச் செய்கிற

கெட்டவனெனப் படுகிறுன். நற்காரியங்களைச் செய்வதினுல் ஒருவன் நல்லவனுகிறுன். கெட்ட காரியங்களைச் செய்கிற தினுல் ஒருவன் கெட்டவனுகிறுன்.

இவ்வுலகில் மனிதன் ஆசா சொரூபனெனச் சொல்லப் படுகிறுன். தன்னுசையின்படியே அவனுடைய் இஷ்டமும் இருக்கிறது. தன்னிஷ்டத்தின் படியே அவனுடைய செய லுமிருக்கிறது. தன் செயலின்படியே அவனடையும் பலனு மிருக்கிறது.

மனிதனுடைய மனமானது எவ்வஸ்துவை நாடி அடைய விரும்புமோ அவ்வஸ்துவினிடம் மனிதன் பலாத்காரமாகக் கொண்டுபோகப் படுகிறுன். காலக்கிரமத்தில் அம்மனிதன் அவ்வஸ்துவினின்று விலகி, தன் பூர்வ அனுபவ ஞானத்துடன் தொழிற்சாலையாகிய இப்பூமிக்கு வந்து செயலுக்குத் தூண் டப்படுகிறுன். ஆசையின் வசமான மனிதனின் கதி இவ்வி தமாயிருக்கிறது.

பற்றில்லாதவனும், ஆசைகளைத் துறந்தவனும் தன்னு த்ம சொரூபத்தைப் பார்த்துத் தன் ஆத்ம சொரூபத்திற்கும் பிரம்மத்திற்கும் ஐக்கியத்தை அறிந்து, ஆத்ம திருப்தனுயுள் ளவனுமான ஜீவன்முக்தனில் பிராணவாயுக்கள் கலந்துவிடுகிற படியால், மரணகாலத்தில் இவைகள் வெளிப்பட்டுப் போகிற தில்லை. உள்ளத்தில் புகுந்துள்ள ஆசைகளெல்லாம் கொல் லப்பட்ட பிறகு சாவுக்குரியவன் சாகாநிலையை அடைகிறுன். சாகாநிலையை அடைந்த இவன் பிரம்மத்தில் கலக்கிறுன். அல்லது பிரம்மத்தோடு ஒற்றுமைப் பட்டவனுய் விடுகிறுன்.

பாம்பினுல் உரிக்கப்பட்ட தோல் புத்தின்மேல் விழு ந்து கிடப்பதுபோல மரணகாலத்தில் மகானுடைய உடல் தரையில் கிடந்தாலும் இவரது ஆத்மா சுயம்பிரகாச பிரம் மத்தோடு பிரம்மமாகவே கலந்துவிடுகிறது.

ஜனகர் :—ஐயனே! இந்த ஆயிரம் வராகன்களைச் சம் மானமாகப் பெற்றுக் கொள்வீராக.

யாஞ்ஞவல்கியர் :—வெகு தூரத்திலுள்ளதும், மிகவும் சூக்ஷ்மமானதுமான இம் மோக்ஷமார்க்கம் என்னால் கண்டுபிடிக்கப்பட்டு உமக்கு சொல்லப்பட்டது. பிரம்மத்தை அறிந்த மகரிஷிகள் இதில் நடந்து சுவர்க்கலோகத்தின் மூலமாக சுவர்க்கலோகத்திற் கப்பாலுள்ள மோக்ஷ லோகத்திற்குப் போகின்றனர்.

மோக்ஷ லோகத்திற்குச் செல்லும் இப்பாதையில் பஞ்சவர்ணங்களில் யாதாவதோர் நிறமுடையப் பிரகாசம் காணப்படுகிறது. பிரம்மத்தை அறிந்தவர்களும், நற்காரியங்களைச்செய்து பிரக்யாதி பெற்றுள்ளவர்களும் இப்பிரகாசத்தினுதவியால் அவ்வழியில் சுலபமாக நடக்கிறார்கள்.

ஆத்ம சொரூபத்தைப் பாராத அக்ஞானிகள் இருள் வடிவான அவித்தையில் அடங்குகிறார்கள். அறிவாளிகளால் வெறுக்கப்படுவதாயுள்ள அந்தகார உலகங்களும் அனேகம் உண்டு. பாப காரியங்களைச் செய்து அறிஞர்களைத் துவேஷித்து சஜ்ஜனர்களை துன்பப்படுத்துகிற அவிவேகிகள் மரணத்திற்குப்பிறகு அவ்வந்தகார உலகங்களை அடைகிறார்கள்.

தன் ஆத்ம சொரூபத்தை அறிந்து, அது நான் என்கிற ஆத்மப்பிரக்ஞையி லிருக்கப்பட்ட ஆத்மஞானி எதை இச்சித்து எதற்காக மறுஜனன மெடுக்க கர்ப்பப் பிரவேசம் செய்யப் போவான்? தேகத்தில் புகுந்துள்ள ஆத்ம சொரூபத்தைப் பார்த்துள்ள ஆத்மதரிசி எவரோ, அவர்தான் உண்மையில் சிருஷ்டி கர்த்தர். ஏனென்றால் அவர்தான் ஒவ்வொன்றையும் செய்கிறவர். உலகங்கள் அவருடையதே. அவரே உலகங்களாகக் காணப்படுகிறவர்.

நாம் இத்தேகங்களிலிருக்கும்போதே இதைக் கண்டறியலாம். அப்படி கண்டறியாவிட்டால் நாம் அஞ்ஞானிகளே. நாம் நஷ்டமடைந்தவர்களே. யார் அறிகிறார்களோ 'அவர் சாதலினின்று விடுபட்ட முக்தர்கள். அறியாதவர்கள் வருந்துவார்கள்.

எவன் இந்த ஆத்ம வஸ்துவைக் கடவுளென்றும், இருக்கிறவைகட்கும் இனிமேலிருக்கப் போகிறவைகட்கும் எஜமானனென்றும் ஸ்பஷ்டமாகத் தன் ஞான நேத்திரத்தால் பார்க்கிறானோ அவனிடம் பயமென்பது சிறிதும் இல்லாமற் போகிறது.

எவனில் நாட்களைக்கொண்ட வருஷங்கள் சுழன்றுகொண்டிருக்கிறதோ அவனை தேவர்கள் பிரகாச சொரூப அறிவுக்கறிவென்றும், அழியாக்காலமென்றும் ஸ்தோத்திரம் செய்து கும்பிடுகிறார்கள்.

யாரில் கந்தர்வர்கள், பிதிருக்கள், தேவர்கள், அசுரர்கள், ராக்ஷஸர்கள், ஐந்துவித ஜனங்கள், பஞ்ச பூதங்கள் நிலைபெற்றிருக்கின்றனவோ அவரை நான் ஆத்மாவென்று நம்புகிறேன். அவ்வாத்ம சொரூபத்தைப் பார்க்கிற நான் அதைப் பிரம்ம சொரூப பரமாத்மனென நம்புகிறேன்.

உயிருக்குயிராகவும், கண்ணுக்குக் கண்ணாகவும், காதுக்குக் காதாகவும், மனதிற்கு மனதாகவும் இருக்கப்பட்ட ஆத்ம சொரூபத்தைப் பார்க்கிறவர்கள் புராண புருஷரும், ஆதிமூலம் பொருளுமான பிரம்மத்தைப் பார்க்கிறவர்களே.

அவர் நாமரூபமற்ற மனதால் பார்க்கப்பட்டவர். மனதில் பற்பல விதங்களான உருவங்களைப் பார்க்கிறவர்கள் ஜனன மரணாதிகளை அடைகிறார்கள்.

இந்த நித்திய ஆத்மசொரூபம் உபமானங்களால் அறியப்படாதது. பிரத்யக்ஷ ஞான நேத்திரத்தால் ஸ்பஷ்டமாகக் கண்டறியப்படுவது. களங்கமற்றது. ஆகாயத்தைக் காட்டி

லும் சூக்ஷ்மமானது. சுயம்பு. மகத்தானது. முடிவில்லாதது. பெரியதைக் காட்டிலும் பெரியது.

ஆத்ம பரமாத்ம சொரூபத்தை தரிசித்த பிரம்மஞானி மௌனமாயிருந்து ஞானஜ்வாலை ரூபமான ஆத்மதேஜஸை வியாபிக்கச் செய்யட்டும். அவரைப் பேசச் செய்யாதீர். பேசுவது அவருக்குப் பிரயாசையே.

பிராண சக்திகளால் சூழப் பட்டுள்ள அறிவுருவான ஆத்மா ஹிருதயத்தில் அமைதியாக சயனித்துள்ளார். அவர் எல்லாவற்றிற்குமரசன். எல்லாவற்றிற்கும் எஜமானன். எல்லாவற்றையும் ஆள்கின்றவர். அவர் நற்காரியங்களால் பெரியவனாய் விடுகிறதில்லை. கெட்ட காரியங்களால் அவர் குறைந்து விடுகிறதுமில்லை. அவர் எல்லாருக்கும் கர்த்தர். அவர் எல்லாருக்கும் ராஜா. அவர் எல்லாவற்றையும் காக்கும் கடவுள். அவர் எல்லா உலகங்களுக்குக் கரையும் எல்லையுமாயிருக்கிறவர். அவரைப் பிராம்மணர்கள் வேதபாராயணத்தாலும், யாக யக்யங்களாலும், தான தருமங்களாலும் விரதத்தாலும், தவத்தாலும், அடைய முயல்கின்றனர். எவர் அவரை அறிகிறாரோ அவர் முனி எனப்படுகிறார்.

ஆத்ம சொரூபத்தை தரிசிக்க விரும்பி சிலர் வீடுகளை விட்டு துறவிகளாய் ஏகாந்தவாசமோ, தீரத்தயாத்திரையோ ஸ்தலயாத்திரையோ செய்கிறார்கள். ஆத்ம சொரூபத்தை அறிந்த சிலர் புத்திர சந்தானத்தை விரும்புகிறதில்லை. ஆத்ம செரூபத்தை அடைந்த இவர்களுக்குப் புத்திர சந்தானத்தால் யாது பலன்? மக்களாசையையும், பொருளாசையையும், உலகவாசையையும் கடந்த மனமுடைய இவர்கள், அன்புடன் பூசித்தன்னமளிக்கிறவர்களுக்குப் புண்ணிய பலனை விருத்தி செய்யும் சந்நியாசிகளாக எங்கும் சஞ்சரிக்கிறார்கள். மக்களாசை, பொருளாசைக்குக் காரணமாகின்றது. பொருளாசை, உலகவாசைக்குக் காரணமாகின்றது.

உண்மையில் இம்மூன்றும் மோக்ஷ விரோதிகளான ஆசைகளே.

இது அல்ல, இது அல்ல, என்கிற நேதிவாக்கியங்களால் ஆத்மாவைத் தெரியச் செய்கிருர்கள். அவர் மன வாக்கிற் கெட்டாதவராகையால், வாக்ரூபமாகக் கொண்டுவர முடியாதவர். அவர் நித்தியராகையால், அழிவடையாதவர். அவர் தனித்த சுயம்புவாகையால், பற்றில்லாதவர். பந்தமற்ற சுதந்திரராகையால், சுக துக்கங்களில்லாதவர். ஜயாபஜயமற்றவர். ஏதோ ஓர் காரணமாக கெட்டதைச் செய்ய நேரினும், நல்லதைச் செய்ய நேரினும் பிரம்ம சொரூபத்தை தரிசித்துள்ள பிரம்மஞானியான மகானை அக்கெட்ட காரிய பலனும், நற்காரிய பலனும் தொடுகிறதில்லை. செய்ய வேண்டியதைச் செய்யாமல் விட்டாலும், செய்யத்தகாததை அவர் செய்தாலும் இவ்விரண்டும் ஆத்ம சொரூபத்தை அறிந்த ஆத்மஞானியை பாதிக்கமாட்டா. பிரம்மசொரூபத்தை அடைந்துள்ள பிரம்மஞானியின் இப்பெருந்தன்மை அல்லது மகிமை அவரால் செய்யப்படும் காரியங்களால் குறையவுமாட்டா. அதிகரிக்கவு மாட்டா. மனிதன் அப்புருஷோத்தமனை அடைய முயல்வானுக. அடைந்து விட்டால் அவன் கரும பலன்களால் கறைபடுத்த முடியாத மனமுடையவனுகிருன்.

பிரம்ம சொரூபத்தை அறிந்த பிரம்மஞானி ஸர்வேந்திரிய சுவாதீன முடையவனுய், சாந்தனுய், ஸர்வதிருப்தனுய், பொறுமையாய் தன்னிலே தன்னைப் பார்த்துக் கொண்டும், மற்றெல்லாவற்றையும் ஆத்மாவாகப் பார்த்துக்கொண்டு கெம்பீரனுகக் காணப்படுகிருன். பொல்லாங்கு அவரை மேற்கொள்ளாது. அவர் தீமைகளை ஜயித்தவர். தீயவை அவரைச் சுடா. அவர் தோஷங்களனைத்தையும் சுட்டெரித்தவர். தோஷரகிதனுயும், களங்கமற்றவனுயும், சந்தேகங்க

ளில்லாதவனுயுமுள்ள பிரம்மஞானி பிரம்மபத அடைந்துள்ள ஜீவன்முக்தன். ஓ அரசே! இதற்குமேல் மனிதன் அடைய விரும்பும் பதவி ஒன்றுமே கிடையாது.

ஜனகர் :—ஐயனே! என்னுட்டிலுள்ள அனைவர்களேயும் தங்களுக்கே கொடுத்தேன். என்னையும் தங்கள் பணியாளாக ஏற்றுக் கொள்வீராக.

யாஞ்ஞவல்கியர்:—பெரியதிலும் பெரியதான இவ்வாத்ம சொரூபமே பிறவா பிரம்மம். எல்லா ஜீவ ஜந்துக்கள் உண்ணும் உணவை உண்பவர் இவரே. எல்லாருக்கும் எல்லா வித சம்பத்துக்களை அளிப்பவரும் இவரே. யார் இவரை இவ்விதமானவரென்று அறிகிறார்களோ, அவர்கள் பாக்கியவான்கள். பெரியதிலும் பெரியதான இவ்வாத்ம சொரூபம் மெலிவடையாததும், சாகாததும், பயமற்றதுமான பிரம்மம். பிரம்ம சொரூபம் உண்மையில் பயமில்லாததே. எவரொருவர் பிரம்மத்தை பயமில்லாததெனஅறிகிறாரோ, அவர் நிற்பயப் பிரம்மமே. இதில் சந்தேக மென்பதில்லை.

ஜனக யாஞ்ஞவல்கிய சம்வாதம் சம்பூர்ணம்.

ஓம். தத். ஸத்.

## யாஞ்ஞவல்கியருக்கும், மைத்திரேயிக்கும் நடந்த சம்பாஷணை.

அக்கால வழக்கப்படி யாஞ்ஞவல்கியர் தன் பால்ய பருவத்தை மகரிஷிகளுடைய சன்னிதானங்களில் குருகுலவாச முறையில் செலவு செய்து, பரிபூரண ஆன்மசித்தி பெற்று உலகநிலைக்குத் திரும்பி, விவாகம் செய்துகொண்டு மைத்திரேயி, காத்யாயனி என்கிற இருமனைவியர்களோடு இல்லறம் நடத்தி வந்தார்.

விதேக கைவல்யநிலை அதாவது மரணகாலம் தனக்குச் சமீபிக்கிறதை முன்னதாக அறிந்த இவர், தன் மனைவியர் இருவர்களுக்கும் தனக்குள்ள சொத்தனைத்தையும் பங்கிட்டுக் கொடுக்க நினைத்து, தன் எண்ணத்தை அவ்விருவர்களிடமும் வெளிப்படுத்தினர்.

இருவர்களில் மைத்திரேயி என்பவள் யாஞ்ஞவல்கியரை நோக்கி ஓ, நாதா! இச்செல்வத்தால் நானடையும் பலன் யாது? அது எனக்கு மோக்ஷ சாம்ராஜ்யத்தைக் கொடுக்க வல்லதா?

யாஞ்ஞவல்கியர் :—ஓ மைத்திரேயி! இச்செல்வத்தைக் கொண்டு நீ செல்வ வந்தர்களைப் போல இவ்வுலகில் வாழலாம். வகையறிந்து செல்வத்தைச் செலவழித்தால் அது மோக்ஷ சாம்ராஜ்யமடைய ஒத்தாசை செய்யும்.

மைத்திரேயி :—ஓ நாதா! நான் மோக்ஷாதிகாரியாகும் பொருட்டு எனக்குச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லத் தங்களை வேண்டுகின்றேன்.

யாஞ்ஞவல்கியர் :—இதுவரையில் எனக்கு உன்மேலிருந்த பிரியம் இன்றுதான் பூரணப்படுவதாயிற்று. சந்தோஷம். உன் சித்தத்தை என்பால் நிறுத்தி நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.

மனைவிக்குப் புருஷன் பிரியப் பொருளாயிருப்பது தேகத்தினிமித்தமல்ல. ஆத்மாவினிமித்தமே. உண்மை

யில் மனைவி ஆத்மாவினிமித்தமே புருஷனிடம் பிரியம் பாராட்டுகிறாள். ஏனென்றால், ஆத்மா பிரிய வஸ்து. அன்புருவாயிருப்பது.

புருஷன் மனைவியை நேசிப்பது மனைவியின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் புருஷன் மனைவியை ஆத்மாவின் பொருட்டே நேசிக்கிறான். ஏனென்றால், ஆத்மா பிரியப்பொருள். அன்புருவாயிருப்பது,

பிள்ளைகளை, பெற்றோர்கள் விசுவசிப்பது பிள்ளைகளின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே மக்கள் பெற்றோர்களால் நேசிக்கப்படுகிறார்கள். ஏனென்றால், ஆத்மா பிரிய வஸ்து.

மனிதர்கள் செல்வத்தை விரும்புவது செல்வத்திற்காகவே அல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே செல்வம் விரும்பத்தக்க தாகின்றது.

நாம் ஆடு மாடுகளை வைத்து போஷிப்பது ஆடுமாடுகளின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே ஆடுமாடுகள் பாதுகாக்கப்படுகின்றன.

பிராமணர்கள் மரியாதையுடன் உபசரிக்கப்படுவது பிராமணர்களின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே பிராமணர்கள் மரியாதையுடன் உபசரிக்கப்படுகிறார்கள்.

க்ஷத்திரியர்களுடைய உறவு க்ஷத்திரியர்களின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே க்ஷத்திரியர்களுடைய உறவு வேண்டியதாயிருக்கிறது.

உலகங்கள் இச்சிக்கப் படுவது உலகங்களின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே உலகங்கள் இச்சிக்கப்படுகின்றன.

தேவதைகளை நாம் உபாசிப்பது தேவதைகளின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே தேவதைகள் உபாசிக்கப் படுகிறார்கள்.

நாம் வேதங்களைப் படிப்பது வேதங்களின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே வேதங்கள் படிக்கத்தகுந்தவைகளாகின்றன.

ஒவ்வோர் ஜீவ ஜந்துக்களிடமும் நாம் அன்புபாராட்டுவது அஜ்ஜீவ ஜந்துக்களின் பொருட்டல்ல. ஆத்மாவின் பொருட்டே. உண்மையில் ஆத்மாவின் பொருட்டே நாம் ஒவ்வோர் ஜீவஜந்துவினிடமும் அன்புடையவர்களாயிருக்கிறோம்.

ஓ மைத்திரேயி! ஆத்மாவை அறியமுடியும். அதைப் பார்த்து அதைப்பற்றி பிறருக்குச் சொல்லவும் முடியும். ஆத்மாவை அறிந்தால் எல்லாவற்றையும் நீ அறிந்தவளாகிறாய்.

ஓ மைத்திரேயி! யார் பிராமணர்களை ஆத்மாவைக் காட்டிலும் வேறெனப்பார்ப்பரோ அவர்கள் ஆத்மப் பிரியத்தை இழந்தவராகிறார்கள்.

யார் க்ஷத்திரியர்களைத் தம்மில் பார்க்கிறதில்லையோ அவர்கள் க்ஷத்திரியர்களால் வெறுக்கப் படுகிறார்கள்.

ஓ மைத்திரேயி! எவன் உலகங்களைத் தன்னில் அதாதது ஆத்மாவில் பார்க்கிறதில்லையோ அவன் உலகங்களால் வெறுக்கப்படுகிறான்.

எவன் தேவர்களைத் தன்னில் பார்க்கிறதில்லையோ, அவன் தேவர்களால் வெறுக்கப்படுகிறான்.

எவன் வேதங்களைத் தன்னில் பார்க்கிறதில்லையோ அவன் வேதங்களால் வெறுக்கப்படுகிறான்.

எவன் எல்லா ஜீவ ஜந்துக்களையும் ஆத்மாவில் பார்க்கிறதில்லையோ, அவன் எல்லா ஜீவஜந்துக்களாலும் வெறுக்கப்படுகிறான்.

எவன் வேறெதையும் தன்னில் பாரானோ, அவற்றால் அவன் வெறுக்கப்படுகிறான்.

ஓ மைத்திரேயி! இந்த பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், இவ்வுலகங்களும், இத் தேவர்களும், இவ் வேதங்களும்,

இஜ் ஜீவ ஜந்துக்களும், மற்றெல்லாமுமே ஆத்மாவாகவே யிருக்கின்றன.

மேள சப்தத்தைக்கேட்கும் உனக்கு மேளத்தின் நினைவும், அம் மேளத்தை அடிப்போனின் ஞானமும் ஏக காலத்தில் உண்டாவது போலவும், புல்லாங்குழலினோசை உன் காதில் விழும்போது புல்லாங்குழலின் அறிவும், அதை வொலிப்போனின் ஞானமும் உனக்கு உண்டாவதுபோலவும், சிருஷ்டிப் பொருள்களைப் பார்க்கும் உனக்கு சிருஷ்டிக் கர்த்தரின் நினைவும் அறிவும் உண்டாகின்றன.

ஓ மைத்திரேயி! ஈர விரகை எரிக்கும்போது புகை தானாகவே கிளம்புகிறதுபோல, இருக் வேதமும், யஜுர் வேதமும், சாமவேதமும், அதர்வண வேதமும், இதிஹாஸங்களும், புராணங்களும், வித்தையும், உபனிடதங்களும், சுலோகங்களும், சூத்திரங்களும், வியாக்கியானங்களும், தியாகமும் நீரும், அன்னமும், இவ்வுலகமும், அவ்வுலகங்களும், எல்லா ஜீவஜந்துக்களும், ஆத்மாவிலிருந்தே வெளிப்படுவதாயிற்று. அப்பெரியவனிடமிருந்தே இவை அனைத்தும் வெளிப்பட்டன.

ஓ மைத்திரேயி! நீருக்கு இருப்பிடம் கடல். ஸ்பரிசத்திற்கிருப்பிடம் சர்மம். உருசிக்கிருப்பிடம் நாக்கு. வாசனைக்கு இருப்பிடம் மூக்கு. நிறங்களுக்கிருப்பிடம் கண்கள். ஓசைக்கிருப்பிடம் செவி. உணர்வுக்கிருப்பிடம் மனது. அறிவிற்கிருப்பிடம் ஹிருதயம். செயல்களுக்கிருப்பிடம் கைகள். நடைக்கிருப்பிடம் கால்கள். வேதங்களுக்கிருப்பிடம் வாக்கு.

ஓ மைத்திரேயி! கற்கண்டிற்கு உருசி அதன் உள்ளே தான் இருக்கிறது, அதன் மேற் புறங்களில் இல்லை என்று சொல்லலாமா? தித்திப்பையே உருவாயுடையதல்லவா கற்கண்டு? அதுபோலவே ஆத்மாவிற்கு உள் என்பதும் கிடையாது. வெளி என்பதும் கிடையாது. அது அறிவுருவாயிருப்பது. அது மேற் சொல்லப்பட்ட இந்திரியங்கள் மூலமாகக் காணப்பட்டு அவ்விந்திரியங்களிலேயே மறைகின்றது. ஆத்மா தேகத்தைவிட்டு வெளிப்பட்டபோது தேகேந்திரியங்கள் தம் தம் அறிவை இழக்கின்றன.

மைத்திரேயி :—ஓ நாதா! இவ்விடத்தில் தாங்கள் எனக்குப் பிரமையையும் சந்தேகத்தையும் உண்டாக்கி விட்டீர். உண்மையில் எனக்கு ஆத்ம சொரூப அறிவு விளங்கவில்லை.

யாஞ்ஞவல்கியர் :—ஓ மைத்திரேயி! நான் உனக்கு மனமயக்கத்தையும், சந்தேகத்தையும் உண்டாக்கும்படியான தொன்றையும் சொல்லவில்லை. உண்மையில் ஆன்மா நாசரகிதமானது. அழியாதது. உலகநிலையிலிருந்து பேசும் போது ஆத்மா போய்விட்டதென்கிறோம். ஆத்மா போகிறதுமில்லை. வருகிறதுமில்லை. தேகம் நாசமடைகிறதே ஒழிய ஆத்மாவிற்கு அழிவுகிடையாது. சூரியன் அசைவதில்லை, மேகங்கள் அசைகின்றன. மேகங்களின் ஓட்டத்தைச் சூரியன் ஓடுகிறதாகச சூரியனிடம் ஆரோபிப்பது பேச்சு முறையும் உலக நடையுமாம்.

ஓ மைத்திரேயி! நீ சுய ஆத்ம ரூபியாக இருக்கும் போது நீ தொடவோ, பார்க்கவோ, ருசிக்கவோ, பேசவோ, கேட்கவோ உனக்கன்னியமானதோர் உருவமில்லை. நீயே எங்குமாயிருக்கிறாய். உலக நிலையில் ஒருவன் மற்றொருவனைப் பார்க்கிறான். ஒருவன் மற்றொருவன் பேசுவதைக் கேட்கிறான். ஒருவன் மற்றொன்றை ருசிக்கிறான். ஒருவன் மற்றொருவனைத் தொடுகிறான். ஒருவன் மற்றொருவனை அறிகிறான். யாரால் மற்றெல்லாமுமே அறியப்படுகின்றனவோ அவரை அவர் அறிவதெப்படி! தனக்கன்னியமாகக் காணப்படுவதை எல்லாம் தானல்ல தானல்லவென்று தள்ளித்தான் தன்னை அவன் அறியலாகும்.

அது தேக மனக் கண்களுக்குப் புலப்படுவதல்ல. ஆகையால்தான், அது பார்க்க முடியாததென சொல்லப்படுகின்றது. அது சாகிறதில்லை. ஆகையால்தான், அது நாசரகிதமானதென்று சொல்லப்படுகின்றது. திருஷ்டி பேதத்தால் அது எல்லாவற்றிலும் கலந்திருப்பதைப் போல் காணப்படினும் அது பற்றற நிற்பதால் அது பற்றற்றதென்று சொல்லப்படுகின்றது. பந்தப்பட்டிருப்பதாகக் காணப்படினும் அது உண்மையில் பந்தப்பட்டதல்ல. ஆகையால்தான், அது சுதந்திரமானதென்று சொல்லப்படுகின்றது.

ஓ மைத்திரேயி ! உனக்கன்னியமாகக்காணப்படுவதெல்லாம் எப்போது உன்னில் மறையுமோ அப்போது நீ உன்னை அகண்டப் பிரகாச அருள்வெளியின்மைய உருவாகப் பார்த்தானந்திப்பாய். இது தான் உன்னால் விரும்பப்பட்ட மோக்ஷ சாம்ராஜ்ஜிய பதவி. ஓ மைத்திரேயி ! நான் அனுக்கிரகிக்கிறபடி நீ நிஷ்டைகூடி ஆத்மபரமாத்ம சொரூபத்தை தரிசித்து மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை அடையக் கடவாயாக.

ஓம். தத். சத்.

---

## முடிவுரையும், பிரதிஷ்டையும்.

---

அடியேனுக்கிருந்த கடவுள் பக்தியும், ஆன்ம உணர்வும் ஸ்ரீ ரமண மகரிஷிகளிடம் குருகுலவாசம் செய்யும் அனுகூலத்தைக் கூட்டி வைத்தன. நான் இம்மகானை விட்டுப் பிரியாமலிருந்த ஐந்து வருஷ காலங்களில் என்னோடிருந்து எனக்கும், ஸ்ரீ ரமண மகர்ஷிகளுக்கும், என்னைப்பார்க்க வரும், சாது ஸஜ்ஜனர்களுக்கும் திரிகரண சுத்தியாகத் தொண்டு செய்ததின் பலனாக என்மனைவிக்கு, அவளுடைய தேக வியோக காலத்தில் நான் அவளருகிலிருக்கத் திருவருள் உதவி புரிந்தது.

அவளுக்கிருந்த குருபக்தியானது ஸ்ரீ ரமணமகரிஷிகளை அவளுடைய மனக்கண்ணிற்குமுன் கொண்டு வந்து நிற்கச் செய்தது. அந்தர்முகத்தில் ஸ்ரீ ரமணரும், பகிர்முகத்தில் அடியேனும் இருக்க நேர்ந்ததின் பலனாக அவளுடைய இவ்வுலக வாழ்வின் முடிவு எமதருமராஜன் நசிகேதுக்குச் சொல்லியுள்ள படியும், யாஞ்ஞவல்கியர் ஜனகருக்குச் சொல்லியிருக்கிறபடியும் இருக்கக்கண்ட யான் சந்தோஷச்சித்தனாகி இவ்வித லாபம் மற்றைய ஸ்திரீ புருஷர்களுக்கும் கிடைக்கலாம் என்கிற நல்லெண்ணத்தால் "மரணத்தின் இரகசியம்" என்கிற பெயரால் இச்சிறு நூலை எழுதினேன்.

மூன்று வருஷங்களாக இதை அச்சிட முயன்றதில் சென்னை திருவல்லிக்கேணி, பெரிய தெருவில் வசிக்கும் புஷ்பால கோதண்ட நாயுடுகார் அவர்களிடம் அடியேனைத் திரு

வருள் கூட்டிவைக்க, அப்பெருந்தகையார் அடியேனுடைய அபிப்பிராயங்களைச் சம்மதமாக ஏற்று, இப்புஸ்தகத்தை அச்சிடும் பேருபகாரத்தைச் செய்தனர்.

இவர் புஷ்பால நாதமுனி நாயுடு காருக்கும், புஷ்பால தாயாரம்மாளுக்கும் பிறந்து வளர்ந்தத் தவப் புதல்வர். சென்னை வண்ணாரப்பேட்டையில் மகா சமாதியிலமர்ந்திருக்கும் சத்குரு, சின்னசாமி நாயுடுகாருடைய பிரிய சிஷ்யர். ஸ்ரீ ரமண பக்தர்களிலொருவர். வேலூர், சர்வேபல்லி நரசிம்மய்யா அவர்களுடைய நண்பர். சாந்த மனமுடைய ஆத்ம ஞானி. இவர் சாதாரண மனிதர்களிலொருவராகக் காணப்படினும், பரிபூரண ஞானவான்களால் விரும்பப்பட்ட இக லோக வாழ்வையும், பரலோக சாம்ராஜ்யத்தையும் சொந்தமாக்கிக்கொண்ட இல்லற ஞானி. குடும்பத்திலிருந்தும், ஆத்ம வயப்பட்ட மனமுடையவர்.

அடியேனுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிய இவருடைய இப் பேருபகாரத்திற்காக இயம தரும ராஜன் முடிவில் நசிகேதுவை முன்னிட்டுச் செய்துள்ள பிரார்த்தனையே இவ்வுபகார புருஷரை முன்னிட்டு நான் செய்யும் பிரார்த்தனையாகும்.

எவரை நான் ஜன்ம ஜன்மங்களாகக் கடவுளென்று கும்பிட்டு அறிவிலும், அன்பிலும் வளர்ந்தேனோ அவரே இப் பிறவியில் குரு மூர்த்தமாக எழுந்தருளி அடியேனை ஆட்கொண்ட படியால், அக்குரு தேவரான ஸ்ரீ ரமணருக்கே என்னால் எழுதப்பட்ட இச்சிறு நூலை, பக்தி விசுவாசத்துடன் சமர்ப்பித்துள்ளேன்.

அன்பர். ப. கோதண்ட நாயுடுகாருடைய விருப்பத்தின் படியும், என் இஷ்டத்தின் படியும் விரைவில் அதிக சிரத்தையோடு, மிக ஒழுங்காக இப்புத்தகத்தை அச்சிட்ட, பீபில்ஸ் பிரிண்டிங் அண்டு பப்லிஷிங் கம்பெனியாருக்கு நான் என் பரிபூரண உள்ளக்களிப்புடன் வந்தன மளிக்கிறேன்.

அடியார்க்கடியேன்,
S. நாராயண ரெட்டி.

Printed at People's Printing & Publishing House, Ltd., Triplicane, Madras. By Kothanda Naidu Garu of Triplicane, Madras.